Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

பொன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 13 ஆம் நாள் துல்ஹஜ் 1 (26-4-63) வெள்ளிக்கிழமை இதழ் 76

சிங்கம் மார்க்
கழிம்பு
சிங்கம் மார்க் கழிம்பு-தடுமன் காய்ச்சலுக்கு
சிங்கம் மார்க் கழிம்பு-வலி, நோவுகளுக்கு
சிங்கம் மார்க் கழிம்பு-சலுக்கு, வீக்கத்திற்கு
சிங்கம் மார்க் கழிம்பு-பிடிப் களுக்கு
சிங்கம் மார்க் கழிம்பு-விஷ ஜந்துக்களின் கடிகள் அல்லது கொத்துதல்களுக்கு
எல்லா வீட்டினருக்கும் ஏற்ற வலி நிவாரணி
மெட்ரோ ஏஜன்ஸி,
235 1/1, கொரில் ரோட், கொழும்பு-11.

பார்லிமெண்ட் சபையில் அங்கத்தினர் அமளி!

மரத்துடன் கார்மோதி மூவர் பலத்த காயம்

சாவகச்சேரியில் அதிகாலையில் சம்பவித்த விபத்து

யாழ்ப்பாணம், வியாழன்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு எதிரிலுள்ள வாகை மரத்துடன் இன்றுகாலை 2 மணிக்கு ஒரு 'கொன்சல்' கார் மோதியதால் ஒருபெண் உட்பட மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மயக்கமுற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சால்ஸ் சந்திரதாசா (வயது 29), இராசன் (வயது 35) ஆகிய இருவரும் காரின்முன் சீட்டில் அமர்ந்திருந்ததால் பலத்த காயமடைந்தனர். கார் ஓட்டிவந்த சந்திரதாசாவை வெளியில் எடுப்பதற்கு சாவகச்சேரி பொலிசார் மிகவும் சிரமப்பட்டனர். சாரதி பக்கத்துக்கதவும், காரின் முன்

(5-ம் பக்கம் பார்க்க)

111 பேரும் விடுதலை

சென்னை, ஏப். 25

அரசாங்க மொழி மசோதாவை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம் செய்ததின் விளைவாக கைது செய்யப்பட்ட தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்த 111 பேர் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

——

கொழும்பு, வியாழன்

இந்தியாவிலுள்ள பிலாய் எஃகு ஆலையில் பயிற்சி பெற்று வரும் 16 இலங்கையர், நாளை ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் செல்வர். அங்கு அவர்கள் மேலும் பயிற்சி பெறவிருக்கிறார்கள்.

அங்கத்தினர் பேச சபாநாயகர் மறுத்ததின் எதிரொலி

பதவி நீக்கம் செய்யப்பட்ட உதவி மந்திரி விவகாரம்

கொழும்பு, வியாழன்

பதவிநீக்கம் செய்யப்பட்ட நீதி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. அசோகா கருணரத்தினா, இன்று பாராளுமன்றத்தில் தமது பதவிநீக்கம் குறித்து அறிக்கை வெளியிட முயன்ற சமயம் அவரை பேசுவதற்கு அனுமதியளிக்க சபாநாயகர் மறுத்ததைத் தொடர்ந்து சபையில் கூச்சலும், சப்தமும், கரகோஷமும் கலந்து காணப்பட்டன. 15 நிமிடம் சபை ஒத்திவைக்கப்பட்டபின் இறுதியில் திரு. கருணரத்ன பேசுவதற்கு சபாநாயகர் அனுமதி அளித்தார்.

இன்று பிற்பகல் பாராளுமன்றம் கூடியபோது பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு. அசோகா கருணரத்ன அரசாங்கக் கட்சி ஆசனத்தை விட்டெழுந்து எதிர்கட்சிப் பக்கம் போய் கல்முனை எம். பி. திரு. ஏ. சி. அகமத்தின் அருகில் அமர்ந்தார்.

கேள்வி நேரத்தின் பின்னர் திரு. கருணரத்ன பேச எழுந்த சமயம் சபாநாயகர் அவரை பேச அனுமதி அளிப்பதற்கு மறுத்துவிட்டார்.

இதைத் தொடர்ந்து பல எதிர்க்கட்சி அங்கத்தவர் ஆட்சேபம் தெரிவித்தனர். திரு. ஆர். ஜி. சேனநாயக்கா மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டபொழுது அவர் சபையில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார் என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஸ்டான்லி திலகரத்ன அப்போது குறிப்பிட்டார். ஜோர்ஜ் ராஜ பச்ச, யு. பி. வீரசேகரா உட்படப் பல உதவி மந்திரிகளும் பதவி நீக்கம் செய்யப்பட்டபொழுது சபையில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்பதையும் திரு. திலகரத்ன குறிப்பிட்டார். சாதாரண எம். பி. க்களே அரசாங்கக் கட்சியிலிருந்து விலகியபொழுது சபையில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டதாக திரு திலகரத்ன மேலும் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் பல முறை ஒழுங்கை நிலைநாட்ட முயன்றும் பல எம். பி. க்கள் தொடர்ந்தும் சத்தமிட்டார்கள். அரசாங்கக் கட்சியிலிருந்து

(8-ம் பக்கம் பார்க்க)

மாநகரசபை கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக்கூட்டம் பின்போடப்பட்டுள்ளதாகத் தாக அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை நடைபெற வேண்டிய கூட்டம் மேயர் ஸ்தானம் காலியாக இருந்ததனால், நடைபெறவில்லை. புதிய மேயராகத் திரு. ஜோன் தெரிவு செய்யப்பட்ட பின் நடைபெறும் முதற் கூட்டம் இது வாகும். இன்று கூட்டம் நடைபெறாமைக்குரிய காரணம் அறிவிக்கப்படவில்லை.

இது பற்றி மாஜி மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் 'வரியிறுப்பாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் செய்யப்படும் ஓர் அநீதியாகும்' என்று தெரிவித்தார்.

——

ரூ. 3,500 அபராதம்

அனுராதபுரம், வியாழன்

உணவுப் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்த 11 பேருக்கு அனுராதபுரம் அரசாங்க அதிபர் மொத்தம் 3,500 ரூபா அபராதம் கட்டும்படி தீர்ப்பளித்துள்ளார்.

தலைமன்னார் கும்பனித்தெரு தடுப்புக் காவல் முகாம்

இலங்கை அரசாங்கத்திடம் இந்திய அதிகாரி புகார்

கொழும்பு. வியாழன்

சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென்றும் விசாகாலாவதியான பின்னர் தங்கியிருந்தவர்களென்றும் கைதுசெய்யப்படும் இந்தியர்கள் காவலில் வைக்கப்படும் தடுப்பு முகாம்களின் மோசமான நிலைமைபற்று இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் இலங்கை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகத்தெரிகிறது.

தலைமன்னாரிலும், கும்பனித்தெரிவிலுமுள்ள தடுப்புமுகாம்களுக்கு இந்திய ஹைகமிஷன் அதிகாரியொருவர் சமீபத்தில் சென்று பார்வையிட்டார். இலங்கை குடியேற்ற இலாகா அதிகாரிகளுடன் இவர் சென்று பார்வையிட்டார்.

இந்த முகாம்களிலுள்ள இடநெருக்கடி பற்றியும் வசதிக் குறைவு உணவுப்பற்றாக்குறை ஆகியவைகள் பற்றியும் தாய்

(5-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர் பேச்சு மீண்டும் டில்லியில்

கராச்சி, ஏப்ரல் 25

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையில் மந்திரிகள் கட்டத்தில் கராச்சியில் நடைபெற்ற ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இன்று காலையுடன் முடிவடைந்தன. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் 15-ந் திகதி புதுடில்லியில் நடைபெறும்.

ஆறாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகள் மே மாதம் 15-ந் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகுமென்றும் இந்திய கோஷ்டியின் தலைவரும் இந்திய ரயில்வே மந்திரியுமான சர்தார்சுவர்ண சிங் தெரிவித்தார்.

இந்திய கோஷ்டியினர் இன்று பிற்பகல் புதுடில்லிக்குப் புறப்பட்டார்.

கராச்சியில் நடைபெற்ற

(5ம் பக்கம் பார்க்க)

சீனாவில் அலி சாப்ரியின் முயற்சி தோல்வி

இலங்கை வட்டாரங்களில் எவ்வித வியப்பும் இல்லை

கொழும்பு, வியாழன்

கொழும்பு மகாநாட்டு யோசனைகளையும், அவற்றுக்கான விளக்கங்களையும் சீனா முற்றிலும் ஏற்றுக் கொள்வதற்கு ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் திரு. அலிசாப்ரி மேற்கொண்ட முயற்சி பலனளிக்காததையிட்டு இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் எதுவித அதிர்ச்சியோ அன்றி வியப்போ அடையவில்லை.

சீன-இந்திய எல்லைப் பிரச்னைபற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரு நாடுகளையும் இணங்கச் செய்வதற்கு கொழும்பு நாடுகள் செய்து கொண்ட மற்றுமொரு முயற்சியாக இது இருந்த போதிலும் இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் சீனா உடன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்த்திருக்கவில்லை.

பீக்கிங், புதுடில்லி ஆகிய இடங்களுக்கு சென்று கொழும்பு மகாநாட்டு யோசனைகளை இரு நாடுகளும் ஏற்க செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள திரு. அலிசாப்ரி அவ்விடங்களுக்குச் சென்றபின்னர் இலங்கைப் பிரதமரையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. திரு. அலிசாப்ரி நாளை சீனாவிலிருந்து புதுடில்லி வந்து சேர்வார். சீன-இந்திய பிரச்னையை தீர்ப்பதற்கு அடுத்தபடியாக கொழும்பு மகாநாடு நாடுகள் என்ன செய்ய விருக்கின்றன என்பது பற்றி தெரியவில்லை.

தெ. யா. ப. நோ. கூ. ச. சமாசம், கிளிநொச்சி

களஞ்சியப் பொறுப்பாளர்

எமது பனைக் கிளை நுகர்ச்சிப்பொருள் கடைக்கு ஓர் பொறுப்பாளர் தேவைப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்கள் 30-4-63 வரை இலங்கையிடமிருந்து எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பளம் எல்லாம் உட்பட மாதம் ரூபா 125-00 மட்டும்.

பிணை ரொக்கம் ரூபா 1000-00.

உறுதி அல்லது வீமாப் பிணை ரூபா 2500-00.

தகுதிகள்:

i வயது 25 முதல் 35 வரை.

ii கனிஷ்ட தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

iii வியாபார அனுபவம் அவசியம்.

க. மயில்வாகனம்
காரியதரிசி.

942

வரி விளம்பரம்

விற்பனைக்கு

புதிய 10 H. P. மோட்டார் ஒன்றும், எலச்றிக் வெல்டிங் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 922

ஆர்மோனியம் விற்பனைக்கு

மிகத்திறமான கால்ப் பெட்டி விற்பனைக்கு உண்டு. விலை 1000 ரூபாவுக்கு மேல். க. சங்கரசிவம், கந்தசுவாமி கோவிலடி, இணுவில். 941

கல்வி நிலையம்

யாழ்ப்பாணம் வங்கிசால் (Bankshall street) வீதியில் 38-ம் இலக்கக் கட்டிடத்திலே தொடங்குவதற்கு முன்பு அறிவிக்கப்பட்டிருந்த கல்வி நிலையம் வருகிற மாதம் 15-ந் தேதி (15-5-63) என்னுற் றொடங்கி நடாத்தப்படும். படிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை அத்திகதிக்கு முன்னதாக எனக்கு அனுப்புக. சோ. இளமுருகனார், நவாலி, மானிப்பாய். 943

தேவை

பியோன் வேலைக்கு நேர்மையுள்ள பையன் தேவை. நேரில் வரவும். குகன் டிராவல் ஏஜன்சீஸ், 135, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 944

மக்கள் வங்கி 20,000 பேருக்கு கடன் வசதி

கொழும்பு, வியாழன்

பெரும்பாலும் வருவாய் குறைந்த 20,000 பேருக்கு மக்கள் வங்கி கடன்வழங்கியிருக்கிறது. மக்கள்வங்கி ஆரம்பமாகி ஒன்றரை வருடகாலத்துக்குள் நியாயமான வட்டியில் இக்கடன் வசதியளிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள்வங்கி ஆரம்பமாகிய இச்சொற்ப காலத்துக்குள் 20,000 பேருக்கு கடன் வழங்கியிருப்பதுடன் இந்த வருடத்தில் மொத்தம் 32 கிளைகளை ஸ்தாபித்துள்ளது.

நெருப்புக்குச்சு தயாரித்தல், சாக்கிலேட் தயாரித்தல், சைக்கிள் பொருத்துதல் போன்ற சிறு கைத்தொழில்களுக்கு மக்கள்வங்கி கடன்வழங்கியிருக்கிறது. மக்கள்வங்கி அடுத்த வருடத்தில் பத்துகிளைகளை 1965-ம் ஆண்டில் பத்துக்கிளைகளையும் திறக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தரின் சின்னமுள்ள வாளிகள்

இறக்குமதிக்கு காங்கிரஸ் கமிட்டி கண்டனம்

கொழும்பு, வியாழன்

புத்தரின் உருவப்படம் அடையாளமாகக்கொண்ட வாளிகளை அரசாங்கம் இறக்குமதிசெய்வதை எதிர்க்கும் நோக்கமாக இலங்கை பௌத்த காங்கிரஸ் செயல் கமிட்டி இன்று கூடுகிறது. புத்தர் படமுள்ள வாளிகள் கலகத்தாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, கொழும்பு நகரிலும், பிற இடங்களிலும் விற்பனைசெய்யப்படுகிறது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் இணைக் காரிய தரிசிகள் இந்த விஷயத்தை வெளிநாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்கள்.

இதற்குமுன்பும் கடதாசி பாரக் கல்லு, 'சிகரட் லைட்டர்', கலண்டர் வேறு பொருட்களிலும் புத்தரின் படம் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து இப்படியான விஷயங்கள் எப்படி நடைபெறுகிறதென்று தெரியவில்லை யென காரியதரிசி தெரிவித்தார்.

இப்படியான பொருட்களை இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு சட்டமிருந்தும் சுங்க இலாகாவினால் எப்படித் தடுக்கப்படாமலிருக்கிறது என்று தெரியவில்லை என்று காரிய தரிசி மேலும் தெரிவித்தார். வாளிகளில் 'புத்தர் மார்க்' என்று எழுதப்பட்டு, ஒட்டப்பட்டிருப்பதோடு, நடுவிலே புத்தர் போதிக்கும் நிலையிலுள்ள ஒரு படமும் காணப்படுகிறது.

இந்த விஷயத்தையிட்டு கூடியவிரைவில் விசாரணை செய்வதாக, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ், பௌத்த காங்கிரஸிற்கு அறிவித்துள்ளார்.

மொழிபெயர்ப்பாளர் நேரம் வீணாகிறது

கொழும்பு, வியாழன்

ஒரே மொழிபெயர்ப்புக்கு விதவிதமான வேறு பெயர்கள் பாவிக்கப்படுவதால் மொழிபெயர்ப்பாளரின் நேரங்கள் வீணாவதோடு, பல குழப்பங்களும் ஏற்படுகிறது.

அரசகரும மொழி இலாகாவினால் மொழிபெயர்க்கப்படும், அரசாங்கதஸ்தாவேஜிகள் அரசாங்க இலாகாவினாலும் பல அமைச்சுகளிடமிருந்தும் திரும்பவும் மொழிபெயர்ப்பதற்காக, மொழிபெறர்ப்பு இலாகாவிற்கு அனுப்பப்படுகிறது.

நிரந்தரக் காரியதரிசிகளுக்கும். தலைமைபீடங்களுக்கும் முறைப்பாட்டை அரசகரும மொழி கமிஷனர் திரு. என். ஈ. எஸ். விஷயசேகரா தெரிவித்துள்ளார்.

இனிமேல் அமைச்சுகளினாலும், இலாகாவினாலும், மொழிபெயர்ப்பிற்கு அனுப்பப்படும் அரசாங்க தஸ்தாவேஜிகள் எதுவானாலும் முன்பு அரசகரும மொழி இலாகாவினாலோ வேறு இலாகாவினாலோ மொழிபெயர்க்கப்படாதா என்று தெரிவிக்கப்படவேண்டும். அப்படி மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் புதுக்க மொழிபெயர்ப்பது அனாவசியம்.

வர்த்தக ஒப்பந்தம்

புதுடில்லி, ஏப். 2

பாரதம் – இந்தோனேஷிய முன்று வருட வர்த்தக ஒப்பந்தம் ஒன்று இன்று கைச்சாத்திடப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

ஆசிரியர் இடமாற்றங்களை பின்போடவேண்டும்

1-1-60-ல் நடைபெறவிருந்த பெருந்தொகையான மாற்றங்கள் எந்த மாற்றத் திட்டத்திலும் அமையாமல் நடைபெற்றன. இதனை ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போர் எதிர்த்தனர். இதனால் முற்றாக நிராகரிக்கப்பட்டது. இனிமேல் சுவீகரித்த பாடசாலையாசிரியர்களிடையேநடைபெறவிருக்கும் மாற்றங்கள் சம்பந்தமான விரிவான அட்டவணை தயாரித்து உரியகாலத்தின் முன்னர் வித்தியாகந்தோரிலும் தொழிற்சங்கக் கந்தோரிலும் ஆசிரியர்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமென அ போது வற்புறுத்தப்பட்டது. தற்போது மாற்றங்கள் நிகழவிருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன, ஆனால் சம்பந்தப்பட்டவர் அட்டவணைப் பிரதியை எங்கும் பார்க்க முடியாமலிருக்கிறது.

1–7–60க்குப் பின் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளில் பல தலைமையாசிரியர், சிரேஷ்ட ஆசிரியர் இடங்கள் காலியாகவுள்ளன. இவற்றை நிரப்ப 1-ம் முறை விண்ணப்பங்கள் கோரப்பட்டுக் கைவிடப்பட்டன மீண்டும் விண்ணப்பியாதவருக்குத் தருணம் கொடுக்கப்படும்வகையில் 3-ம் முறையும் விண்ணப்பிக்க இடங்கொடுக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக மேற்படி இடங்கள் நிரப்பப்படாது கடத்தப்பட்டு வ கிறது. இது சம்பந்தமாகத் தொழிற்சங்கங்கள் மீண்டும் மீண்டும் முறைப்பட்டதாகவும் தெரிகிறது. ஆனாலும் அவ்விடங்கள் நிரப்பப்படாதுள்ள நிலையில் குறித்த இடங்கள் தலைமையாசிரியர் மாற்றங்களால் அண்மையில் மறைக்கப்படுவதற்கான சண்டைப்பு நடைபெறவிருக்கிறதாக அறியப்படுகிறது. குறித்த 1-7-60க்குப் பின்னர் அரசினராசிரியர்கட்கு மூன்று முறை பதவியுயர்ச்சி கொடுக்கப்பட்டுள்ளது. சுவீகரித் பாடசாலையாசிரியர்கட்குஉள்ள இடங்களும் மறைக்கப்படுவது அநியாயமானது.

"இந்த நிலையில் அரசினர் ஆசிரியர்களைச் சுவீகரித்தபாடசாலைகட்கு மாற்ற வேண்டாம்; மாற்றினால் சேவை கூடியவர்களின் கீழ் சேவை குறைந்தோர் கடமையாற்ற வேண்டிய கன்னாவியா நிலைமையுண்டாகும்" எனப் பலதரம் சொல்லப்பட்டது. மேலும் 1-7-60க்குப் பின்னர் காலியாக உள்ள தலைமையாசிரியர் சிரேஷ்ட ஆசிரியர் பதவிகள் அதே இனப்பாடசாலையாசிரியர்களால் நிரப்பப்பட்டு ஆசிரியர் சேவையிற் சேர்ந்த காலம் தொடக்கம் கணிக்கப்பட்ட மூப்பட்டவணையின்கீழ் ஒன்றாக்கப்பட்டதன் பின்னரே அரசினர் பாடசாலைகளை சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளிடையே கலந்து மாற்றங்கள் நிகழ்தல் நியாயமானது.

ஆனால் இன்றோ பல உதவியாசிரியர் மாற்றங்கள் கலந்து மாற்றப்படுவதல்லாமல் தலைமையாசிரியர் மாற்றங்களும் கூட இடம் பெற்றுள்ளன. காரணம் கேட்டால் "மனேச்சர் முகாமையின்கீழ் அவருக்குச் சொந்தமான அல்லது நவீன காரணங்களால் கொண்டுவரப்பட்ட சேவை குறைந்த தலைமையாசிரியரின் கீழ் அவரிலும் சேவைகூடிய அல்லது குறித்த தலைமையாசிரியரையே படிப்பித்தவர்களான ஆசிரியர்கள் உதவியாசிரியர்களாக இருந்த நிலைமை சுட்டிக்காட்டப்படுகிறது. அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றபோது விடிவுகாலம் கிடைக்கும் நியாயத்தை இனிமேலாவது எதிர்பார்க்கலாம் என எதிர்பார்த்திருந்த மேற்படி ஆசிரியர்கள் தலையில் ஓங்கி அடிக்கப்படுவது நியாயமாகாது. சேவை பிரதானமாகக் கணிக்கப்பட்டு நீதிவழங்கப்படுதல் வேண்டுமெனக் கேட்பது நியாயமானதே.

ஆசிரியர்கட்கு அரசியல் சுதந்திரம் கிடைத்த காலத்தில் சில ஆசிரியர்கள் உந்தப்பட்டு பல இயக்கங்களின் முன்னணியில் நின்றிருக்கலாம். பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்து அரசினர் சேவையின்கீழ் நேரடியாக ஆசிரியர்கள் வந்த பின்னர் ஆசிரியர்கள் மேற்படி இயக்கங்களில் ஈடுபட்டால் நியாயமெனக் கண்டபோது தண்டனைக்காளாக்கலாம். முன்னர் முகாமையின்கீழ் ஆசிரியர்களிருந்தபோது ஈடுபட்டார் என்பதற்காகத் தற்போது தண்டனை புரிவதும் அநியாயமானதே.

எனவே மாற்றம் அவசியமெனக் காணும் போது பாடசாலைக்கிடை யூறுயுள்ளவர்களை விசாரணையில் குற்றவாளியாய் காணுபவரை சுகாதார அத்தாட்சி மூலம் மாற்றுவதற்கு ரியோரை ஓர் திட்டத்தின் கீழ் படிமுறையாக வருட ஆரம்பத்தில் ஆசிரியர்கள், ஆசிரிய தொழிற்சங்கங்கள் இவற்றின் அனுசரணையுடன் குறித்த ஆசிரியரதும் அவர் பாடசாலை மாணவரதும் நன்மையின் பொருட்டு மாற்றுவதுதான் நியாயமானது.

இவ்வாறு பெருந்தொகையாக வருடமத்தியில் தவணை மத்தியில் வரையறையான திட்டமின்றி மாற்றுவதால் நமக்கென்ன நாம் மாறிப் போபவர்தானே மனைவரோ, பாடசாலையோ எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணம் வளர்ந்து சம்பளத்துக்கு மாத்திரம் வேலைசெய்பவர்களாக வித்தியாபகுதியார் ஆசிரியர்களை ஆக்கக்கூடாது.

ஆகையால் அண்மையில் 1-6-63-ல் நடைபெறவிருக்கும் மாற்றங்களைப் பின்போட்டு இவற்றையாராய்ந்து தேசிய விசாரணைச் சபையார் அறிக்கையையும் மருவி வருகிற வருடத்தொடக்கத்தில் ஓர் திட்டமான ஒழுங்கின்கீழ் மாற்றுவதற்கு வித்தியாபகுதியாரும், தொழிற்சங்கங்களும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோப்பாய், சாமி

நெடுந்தீவு நோயாளர் கஷ்டம்

ஊர்காவற்றுறை, வியாழன்

நெடுந்தீவு அரசினர் வைத்திய சாலையில் போதிய கட்டில்கள் இல்லாமையால் நோயாளர் நிலத்திலே நித்திரை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுவருகிறது.

தனியொரு காரியாதிகாரி பிரிவையுடைய நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் சமீப காலமாகி கட்டாக்காலி நாய்களினதும், ஆடு, மாடுகளினதும் இருப்பிடமாகக் காட்சியளித்து வருவதையிட்டு நோயாளரும் பொதுமக்களும் அதிருப்தி கொண்டுள்ளனர். ஆஸ்பத்திரியைச்சுற்றி மதிலோ அல்லது வேலியோ இல்லை. இதனால் ஆடு மாடுகளின் நடமாட்டத்திற்கு வசதி ஏற்படுகிறது. நோயாளரின் பாய்களும், உடைகளும் ஆடு மாடுகளுக்கு இரையாகின்றன. உணவு அருந்தும் பாத்திரங்களை நாய்கள் தூக்கிக்கொண்டு போய் விடுகின்றன வென்றும் சொல்லப்படுகிறது.

பிரயாணக் கஷ்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு மக்களுக்கு உள்ளூரிலும் பல கஷ்டங்கள் இருப்பதையிட்டு பலத்த புகார் கூறப்பட்டுவருகிறது.

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபன ஆண்டுவிழா

கொழும்பு, வியாழன்

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் தனது முதலாவது ஆண்டுவிழாவை இம்மாதம் 28–ந் திகதி கொண்டாடவிருக்கிறது.

கூட்டுஸ்தாபனத்தின் ஆண்டு விழாவை இம்மாதம் 28-ந் திகதி கொண்டாடவிருக்கிறது,

கூட்டு ஸ்தாபனத்தின் ஆண்டுவிழாவில் வர்த்தக உணவு கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அன்றைய தினம் பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த 30 என்னெய்த் தாங்கி லொறிகள் நகரில் பவனி வரும். விழாவில் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நீர்கொழும்பு

தபால் ஊழியர் வேலை நிறுத்தம்

நாய் கடித்தவருக்குவழங்கப்பட்ட லீவு குறித்து ஆட்சேபம்

நீர்கொழும்பு. வியாழன்

நீர்கொழும்பு தபாற்கந்தோரில் கடமையாற்றும் 45 கனிஷ்ட ஊழியர் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர்.

கடமையாற்றிக்கொண்டிருந்த தபாற்காரர் ஒருவர் நாயினால் கடிக்கப்பட்டபோது அவருக்கு டாக்டர் இருமணித்தியால லீவே வழங்கினாராம். இதை ஆட்சேபிக்குமுகமாகவே ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

சென்ற செவ்வாய்க்கிழமை நாயினால் கடிக்கப்பட்ட தபாற்காரர் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் கடமையாற்றிவரும் டாக்டரொருவரிடம் சிகிச்சை பெறுவதற்காகச் சென்றார். அப்பொழுது டாக்டர் ஒரு ஊசிபோட்டு இரண்டுமணித்தியால லீவுக்கான வைத்தியப்பத்திரத்தைக் கொடுத்ததாகத் தெரிகிறது.

டாக்டர் நடந்துகொண்ட முறைபற்றி சுகாகாரசேவை டைரக்டர் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தபால்தந்தி ஊழியர் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதற்கூட்டம்

மட்டக்களப்பு, வியாழன்

கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணியின் முதற்கூட்டம் அடுத்தமாதம் 12-ம் திகதி நடைபெறவிருக்கிறது. தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வரென்றும்தெரிகிறது.

கடன் ஒப்பந்தம்

பொன், ஏப். 26

இந்திய எஃகு கனரக மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் நேற்று மேற்கு ஜெர்மனி அதிபரையும் வெளி விவகார மந்திரியையும் சந்தித்தார். இன்று ஜெர்மனி கடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார்.

லாவோஸ் நிலைமை மோசமாகிறது!

ஜார்ஸ் சமவெளியில் மீண்டும் பீரங்கி முழக்கங்கள்

லாவோஸ், ஏப். 25

லாவோஸில் ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் சண்டை ஓய்ந்துவிட்டதாக நேற்று முன்தினம் அறிவிக்கப் பட்டபோதிலும், அந்தப் பகுதியில் விட்டுவிட்டு பீரங்கிச் சத்தம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

லாவோஸில் ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் கம்யூனிஸ்ட் பதட்லாவோ துருப்பினருக்கும் நடுநிலைமைத் துருப்பினருக்கு மிடையே கடந்தவாரம் நடைபெற்ற சண்டை ஓய்ந்து விட்டதாவும், ஜார்ஜ் சமவெளியில் இப்பொழுது அமைதி நிலவுகிறதென்றும் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்த பொழுதிலும் அந்தப்பகுதியில் பீரங்கி முழக்கங்கள் விண்ணைப் பிளப்பதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

பதட்லாவோ படைத் தலைவருக்கும் நடுநிலைமைப் படைத் தலைவருக்குமிடையே யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. நடுநிலைமைப் படைத் தலைவர் ஜெனரல் காங்லீயன் தலைமைக்காரியாலயத்தில், சர்வதேச கட்டுப்பாட்டு ஸ்தாபனத்தின் கோஷ்டியொன்றை நிறுவ மூன்று தலைவர்களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டிருக்கிறதென்றும் நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய நிலைமை திருப்திகரமாகவில்லையென்று கூறப்படுகிறது.

நிலைமை மோசமாம்

தற்போதைய லாவோஸ் நிலைமை மிகவும் மோசமாகவிருக்கிறதென்றும், உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால், நிலைமை எதிர்பார்ப்பதை விட மோசமாகிவிடுமென்று லண்டன் வட்டாரங்கள் கூறுகின்றன.

கருத்துவேற்றுமை

ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தின் நிலைமை அறிவதற்கு கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தூது கோஷ்டி ஒன்றை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்றும் இதற்கு சர்வதேச கட்டுப்பாட்டு கமிஷனில் நிலவும் கருத்துவேற்றுமையே காரணம் என்றும கூறப்படுகிறது. இவ்விதக் கருத்து வேற்றுமைகளினால், லாவோஸ் நிலைமை மேலும் மோசமாகலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

அவரல் ஹரிமன்-குரோமிக்கோ பேச்சு

லாவோஸ் நிலைமை குறித்து சோவியத் வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவுடன் பேச்சுக்கள் நடத்தும்பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் விசேஷ தூதர் திரு. அவரல் ஹரிமன் இன்று மாஸ்கோ செல்லார்.

தமிழ்தேசியகட்சியினர் 111 பேர் கைது!

ஆட்சிமொழி மசோதாவை எதிர்த்து மறியல்

சென்னை, ஏப். 25

அரசாங்க மொழி மசோதாவை எதிர்த்து மறியல் செய்த தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்த 111 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய லோகசபையில் இப்பொழுது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் அரசாங்க மொழி மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று சென்னையில் தமிழ்தேசியக்கட்சியைச் சேர்ந்த பலர் மறியல் செய்தனர். மறியல் செய்தவர்களில் நேற்று நண்பகல் ஒரு மணி வரை 57 பேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். ஹிந்தி மொழி ஆட்சி மொழியாவதைஎதிர்த்து தமிழ் தேசியக்கட்சித் அங்கத்தினர்கள் தொடர்ந்தும் மறியல் செய்ததால் நண்பகல் ஒரு மணிக்குப் பின்னர் 54 பேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி மொத்தமாக 111 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்டவர்கள் மூவர் கார்ப்பரேஷன் ஊழியர்கள்.

சம்பத் அறிக்கை

தமிழ் தேசியக்கட்சித் தலைவர் திரு ஈ. வி. கே. சம்பத் ஆண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் சென்னையிலுள்ள டெல்லி அரசாங்க காரியாலயத்துக்கு முன்னர் ஆட்சி மொழி மசோதாவை எதிர்த்து மாதம் 24-ந் திகதி (நேற்று) தமிழ் தேசியக்கட்சியினர் மறியல் நடத்துவார்கள் என்றும் இம்மாதம் 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்திய அரசியல் சட்டத்தைத் தாங்கள் தீயிலிட்டுக் கொளுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

அலிசாப்ரி புதுடில்லி விஜயம்

புதுடில்லி, ஏப். 25

சீன – பாரத எல்லைத் தகராறு சம்பந்தமாக திரு. சூ என் லாயுடன் பேச்சுக்கள் நடாத்தும் பொருட்டு பீக்கிங் சென்ற ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரி நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லி வந்து சேருவார். இன்று அவர் ஷாங்கையில் மாஸே துங்கைச் சந்திப்பார்.

"நேரு பணிந்துவிட்டார்"

அண்ணா கருத்து

புதுடில்லி, ஏப். 25

'ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கும் என்ற தமது வாக்குறுதியிலிருந்து ஹிந்தி ஏகாதிபத்தியவாதிகளின் நிர்ப்பந்தம் காரணமாக நேரு பின்வாங்கி விட்டார்' என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

திரு. அண்ணாதுரை பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டதாவது:-

ஆட்சி மொழிகள் சம்பந்தமாக 1947-ல் இருந்த நிலைமையே நீடிக்கவேண்டும். பிரச்னைகள் யாவும் புதிதாகப் பரிசீலனை செய்யப்படவேண்டும். ஹிந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. அவர்கள் அதிருப்தி அடைந்தால் பெரிய கிளர்ச்சி மூளக்கூடும். இதற்கான பொறுப்பு அரசாங்கத்தையே சாரும்.

திரு. நேரு, திரு. பிராங் அந்தோனிக்கு எழுதிய கடிதத்திலிருந்து, ஹிந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த எம் பி.க்களின் ஆலோசனைகளைக் கேட்க அவர் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

நவீன நல்லதங்காள்

ஆரணி, ஏப். 25

ஆரணிக்கடுத்த 6-வது மைலில் உள்ள மருசூரில் 30 வயதுள்ள ருக்மணி என்னும் பெண் தனது ஆறு குழந்தைகளையும் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டுபோய் தன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள கிணற்றில் வீசி எறிந்துவிட்டுத் தானும் விழுந்து மாண்டார். தெய்வாதீனமாக 12 வயதுள்ள மூத்த பெண் கரையைப் பிடித்துக்கொண்டு உயிர் தப்பினார். 5 குழந்தைகளும் தாயும் இறந்துவிட்டனர். ருக்மணி கடந்த ஆறு மாதகாலமாகப் புத்திசுவாதீனமின்றி இருந்துவந்ததாகவும், மூன்றுமாதக் கர்ப்பிணி எனவும் கூறப்படுகிறது.

மாநகரசபையில் சுவையான சம்பவங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தற்போதைய மேயரான திரு. பி. எம். ஜோன் தெரிவு செய்யப்பட்ட 13-வது நாளே பதவியிலிருந்து நீக்குவதற்கு கூட்டிய விசேஷ கூட்டத்தில் பல சுவையான சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றுட் சிலவற்றைக் கீழே காணலாம்.

யாழ்ப்பாண கூட்டு மாவட்ட நீதிபதி மாநகரசபை வழக்கொன்றில் தற்போதைய மாநகரசபை அங்கத்தவர்களை "கழுதைகள்" என்று குறிப்பிட்டது பற்றியும், அக்குறிப்பு சரியாக இருப்பது பற்றியும் அங்கத்தவர்கள் பலர் தாமே ஒத்துக் கொண்டனர். உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இக்கழுதைக் கதையின் பொருத்தத்தை சிறப்பாக எடுத்துக் காட்டி, கழுதைகள் கூட இவ்வித வெட்கக்கேடான வேலைகளைச் செய்ய மாட்டாதென்று கூறினர்.

பத்திரிகைகள் மீது அபுசாலி பாய்ச்சல்

ஹாஜி வி. எம். எம். அபுசாலி வழமைபோல சிம்ம கர்ஜனை செய்தார். முக்கியமாக அவர் பத்திரிகையாளர் மீது பாய்ந்தது சுவைக்கக் கூடியதாக இருந்தது. பத்திரிகைகளின் உரிமைக்காக இதே சபையில் வாதாடிய அபுசாலி உணர்ச்சி வசப்பட்டு பத்திரிகையாளர் மீது கண்டனம் தெரிவித்துப் பேசினர்.

காஷ்மீர் பேச்சுக்கள்

கராச்சி, ஏப். 25

நேற்றுடன் முடிவடைவதாகவிருந்த பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையேயான காஷ்மீர் பேச்சுக்கள், தொடர்ந்து இன்று நடைபெற்றன.

காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே கராச்சியில் நடைபெறும் ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கள் இன்று தொடர்ந்தும் நடைபெற்றன. ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கள் நேற்று புதன்கிழமையுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆறாவது சுற்றுப்பேச்சுக்களை நடத்துவதா இல்லையா என்பதில் ஒரு முடிவு காணாததால் பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே இன்று தொடர்ந்தும் பேச்சுக்கள் நடைபெற்றன.

நேற்றுக் காலையும், மாலையும் நடைபெற்ற பேச்சுக்களில் பாரத-பாகிஸ்தான் கோஷ்டிகளின் ஆலோசகர்களும் கலந்துகொண்டனர். பாரத கோஷ்டியின் தலைவர் திரு. சுவர்ணசிங்குக்கும், பாகிஸ்தான்கோஷ்டியின் தலைவர் திரு. புட்டோவுக்கும் நேற்றுக்காலையில் நடைபெற்ற பேச்சுக்கள் ஒருமணி நேரம்வரை நீடித்தது. மாலையில் நடைபெற்ற பேச்சுக்கள் 50 நிமிட நேரம்வரை நீடித்தது, பேச்சுக்களின் விபரம் அறிவிக்கப்படவில்லை.

காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே ஆறாவது சுற்றுப்பேச்சுக்கள் நடைபெறுமா இல்லையா என்பது இன்று வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறுமா இல்லையா என்ற முடிவு, இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளியிடப்படவில்லை

'இலங்கை இந்தியர் பிரச்னையில் அளிக்கப்பட்டபதில் தவறு'

இந்திய அரசாங்கத்தின் மீது ராஜாஜி குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.25

"தமது வாழ்நாள் முழுவதும் இலங்கையிலேயே வாழ்ந்து அந்த நாட்டின் நலனுக்கும் அபிவிருத்திக்கும் உழைத்து வரும் லட்சக்கணக்கான இலங்கை இந்தியப் பிரஜைகளுக்கு இலங்கைப் பிரஜா உரிமையை அளிக்க இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது அந்த அரசாங்கத்தின் உரிமைக்கு உட்பட்டது என இந்திய அரசாங்கம் பதிலளித்திருப்பது பரிதாபத்துக்குரியதொன்று."

மேற்கண்டவாறு சென்ற 20-ந் திகதி வெளியான சுவராஜ்யா என்ற பத்திரிகையில் ராஜாஜி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது"

இந்திய அரசாங்கத்தின் இவ்வித பதில் தவறான வழியில் இட்டுச்செல்வதாகவிருக்கிறது. இது இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளை மேலும் கஷ்டத்துக்குள்ளாக்குவதாக இருக்கும். உலகின் வேறெந்தப் பகுதிகளிலும் இடமின்றி இலங்கையிலேயே வாழ்ந்து வரும் ஒரு பகுதியினருக்கு அவர்களுக்குரிய உரிமையை மறுத்து 'நாடற்றவர்' என சட்டத்தின் மூலம் ஒதுக்குவதற்குச் சம்மதிப்பது பரிதாபத்துக்குரியதொன்றாக விருக்கும்.

இந்திய அரசாங்கத்தின் பதில் பாகுபாடு காட்டுவதில் அக்கறை கொண்டுள்ள இலங்கை அரசாங்கத்துக்கும், அரசியல் வாதிகளுக்கும் உரிமை யிழந்து நிர்கதிக்குள்ளாகிய பல இலங்கைப் பிரஜைகளை நசுக்குவதற்கு வாய்ப்பளிக்கும்.

இதற்காக அவருடைய கட்சியைச் சேர்ந்த பலர் அவருடைய தவறை எடுத்துக் காட்டி உங்கள் கைவரிசையால் எம்மை விலக்கி விடுங்கள் என்று வேண்டிக் கொண்டனர். பலர் ஹாஜி அபுசாலியின் தேவையற்ற முழக்கத்திற்காக அனுதாபம் தெரிவித்தனர்.

மேயர்ஜோனை ஏற்றி இறக்கும் தனித்திறமை இச்சபைக்கே உரியது என்றும அடுத்த பொதுத் தேர்தலில் மேயர்களை ஏற்றி இறக்கும் திறமையைப் பொறுத்தே எமது தெரிவும் வரக்கூடுமெனவும் திரு ஆ. துரைராஜசிங்கம் சொன்னார்.

"அரசியல் சட்டத்தை திருத்துவது அவசியம்"

— ராஜாஜி

சென்னை, ஏப். 25

"மக்கள் தங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கவும் பார்லிமெண்டுக்கு விண்ணப்பித்துக் கொள்ளக்கூட வாய்ப்பில்லாத வகையிலும் தற்போதைய ஆட்சிமொழி மசோதா கொண்டுவரப்படுகிறது. ஹிந்தி பற்றி அவசரக் கோலமாகவும் அதன் விளைவுகளைக் குறித்துச் சிந்திக்காமல் உற்சாகத்திலும் செய்தமுடிவை மீண்டும் ஊர்ஜிதம் செய்யவும் மசோதா முற்படுகிறது" என்று ராஜாஜி கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம் பற்றி தான் கொடுத்த வாக்குறுதி தனது சொந்த அபிப்பிராயம்தான் என்று நேருஜி கூறியதாகச் சொல்லப்படும் அறிக்கைபற்றி ராஜாஜி கருத்துத்தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ராஜாஜி மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் சட்டத்தை திருத்துவது அவசியம். இணைப்பு ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டியதும் அவசியம். ஹிந்திபேசாத மக்களின் சார்பில் ஆட்சேபமும் கிளர்ச்சியும் நீடிக்கவேண்டும். அவர்களுடைய நலவுரிமைகளைப் பாதுகாப்பது அறிஞர்களின் கடமையாகும்.

தாங்களும் மத்திய அரசாங்கத்துள்ள ஆளும் கட்சிகளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றகாரணத்தால் ராஜ்ய அரசாங்கங்கள் தமது ராஜ்ய மக்களிடம் உள்ள கடமையைத் தட்டிக்கழிக்கக் கூடாது.

மொரார்ஜி தேசாயினால் அவருடைய தங்கக்கட்டுப்பாடு விதிகளை நிறைவேற்ற முடியுமானால் பிரதம மந்திரியால் கொடுக்கப்பட்ட நியாயமான வாக்குறுதிக்கு அதிக வலுவுண்டு.

மாஸ்கோ, ஏப். 25

அணு ஆயுத பரீட்சைத் தடையில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையை அகற்றும் பொருட்டு நேற்று மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் - அமெரிக்க தூதர்கள் ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவை சந்தித்து ஒன்றரை மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

மணி வாக்கு

பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது. குணம் தான் அதைத் தீர்மானிக்கும். தெய்வம் யாரையும் உயர்வாகவோ தாழ்வாகவோ பிறப்பிக்கவில்லை. யாரையும் பிறப்பால் தாழ்ந்தவரென்றோ, தீண்டத்தகாதவரென்றோ கருதுவது தெய்வத்தையே மறுப்பதாகும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 13 உ (26-4-63)

தொழிலாளர் ஒற்றுமை

இதுவரை பிளவுபட்டுப் பிரிந்திருந்த இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் இம்முறை ஒற்றுமையாக மேதின விழாவைக் கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலும் இடதுசாரிக்கட்சிகள் இரண்டும் இவ்விழாவை ஒற்றுமையாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளன. தொழிலாளர் சமூகம் மகிழ்ச்சியுடன் இதை வரவேற்கும்.

உலகத் தொழிலாளரிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே மேவிழா கொண்டாடப்படுகின்றது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவ்வித ஒற்றுமை ஏற்படமுடியாமல் வேறுபல சக்திகள் தொழிலாளரைப் பிரித்து வைத்துள்ளன. இலங்கையையே எடுத்துக் கொள்வோம். இம்முறை இடதுசாரிக்கட்சிகளான சமசமாஜ், கம்யூனிஸ்ட், எம். ஈ. பி. இம்மூன்றும் மேவிழாவை ஒற்றுமையாக நடத்தினாலும் கொழும்பிலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் வெவ்வேறு இடங்களிலே கூட்டங்களை நடத்தப் போவதாகச் செய்திகள் கூறுகின்றன. இடதுசாரிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டிருக்கையில் வலதுசாரிகளிடையே அது இல்லை. தொழிலாளர் சமூகத்தை, இங்கு பலபல அரசியல் கட்சிகளும் தங்களுக்கிடையே கூறுபோட்டுக்கொள்வது அவர்களைப் பிளவுபடுத்திப்பலவீனப்படுத்தவே செய்யும். இந்நிலை மாற வேண்டும்.

மேலும் மலைநாட்டிலே லட்சக்கணக்கான தொழிலாளர், நாடற்றவர்களாகவும் அரசியல் அனாதைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இது தொழிலாளர் சமூகத்துக்கே செய்யும் பெரிய அநீதியாகும். சர்வதேச தொழில்சங்க சட்டப்படி ஒரு நாட்டில் குடியேறிய தொழிலாளி தொடர்ந்து அங்கு ஐந்து வருடங்கள் வசித்திருப்பின் அவர்களை அந்நாட்டுப் பிரஜைகளாக ஏற்று, அரசியல் முதலியசமஉரிமைகள் அளிக்க வேண்டுமென்று கூறுகின்றது. ஆனால் இலங்கையிலேமலைநாட்டிலுள்ள தமிழ்த் தொழிலாளர் இங்கு பல தலைமுறைகளாக வசித்தும் அவர்களைத் தனித்து ஒதுக்கி சாதாரண மனிதஉரிமைகளும்கூட அவர்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன.

உலகத் தொழிலாளரெல்லாம் ஒரே குடும்பமென்பதை அறிவுறுத்தும் இக்காலத்தில் இலங்கையின் முன்னேற்றத்துக்காக உழைத்துவரும் லட்சக்கணக்கான இம்மக்களை, நாடற்றவராக்கியும் அவர்களது குழந்தைகளுக்கு இங்கு கல்வி, இலவசப்பால் முதலிய வசதிகளை மறுத்தும் வேற்றுமைப்படுத்துவதைப்பற்றி இங்குயாரும்பெருமைகொள்ள முடியாது. ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் அடிப்படை விதிகளுக்கும் இது மாறுபட்டதாகும். சில சுயநல அரசியல் வாதிகள்வகுப்புவாதவெறியை இங்கு தொழிலாளர் சமூகத்திலும் புகுத்தி அவர்களைப் பிரித்து ஒதுக்கிவிட முயற்சி செய்துவருவதைப் பார்க்கின்றோம். தொழிலாளர் சமூக ஒற்றுமையிலும் முன்னேற்றத்திலும் உண்மையில் அக்கறை கொண்டவர்கள் இவ்வித முயற்சிகளுக்குச் சற்றும் இடம் கொடுக்க முடியாது.

தொழிலாளர் எந்த சாதி, மத, இனமாயினும்சரி அவர்களுக்குச் செய்யப்படும் பாதகம் தொழிலாளர் சமூகமனத்தையுமே பாதித்து அவர்களைப் பலவீனப்படுத்துவதாகும். இலங்கையிலே மலைநாட்டுத் தொழிலாளர் சமூகத்தில் பெரும்பான்மையோருக்கு அரசியல் முதலிய உரிமைகளை மறுத்திருப்பது, இங்கு தொழிலாளர் முன்னேற்றத்துக்குச் செய்துள்ள பெரிய தீங்காகும். உலகத் தொழிலாளரின் ஒற்றுமைக்காக நடத்தப்படும் மேவிழாவை இங்கு கொண்டாடுபவர் யாராயினும் மலைநாட்டிலுள்ள தங்கள் சகாக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரிய தீங்கை நீக்க முற்படுவது மிகவும் அவசியமாவதுடன், அதனால் இங்கு தொழிலாளர் சமூகத்தைப் பலப்படுத்தி, தங்கள் நன்மையையும் பாதுகாத்துக் கொள்ளுவர்தாக இருக்கும்.

ஒரேகிராமம் ஒரேகுடும்பம்

(ஏ. டி. ஆர்யரத்தினா)

அடுத்த பத்து ஆண்டுகளும், இந்த நாட்டிலுள்ள மக்களுக்குத் துரிதமான காலமாக இருக்குமென நான் நம்புகிறேன். இந்த நாட்டின் வருங்கால சரித்திரத்தை இந்தக் காலம் தான் தீர்மானிக்கும். இந்தக் காலத்திலுள்ளவர்கள் தான் இனிப் பிறக்கப்போகும் பரம்பரைக்குப் பதில் கொடுக்க வேண்டியவர்களாவர்.

பதினைந்து வருஷ காலமாக நாங்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டும், அதை நாங்கள் இன்னொரு இடத்திலிருந்து பெற்றதெனக் கருதியதனால் நன்மையைஅடையமுடியவில்லை அதே சமயத்தில் பெரும்பாலான மக்கள் அடிப்படை வாழ்க்கை இல்லாமலும், பட்டினியாலும் கஷ்டப்படுவதை அறிகிறோம். மதம், சாதி போன்றவைகளினால் சமூகம் சீர்குலைந்திருக்கிறது. ஆகையால் எங்களுடைய இயக்கம்வெற்றி பெற்றதெனசொல்லமுடியவில்லை. இதற்கு ஒரு மாற்று வழியை பின்பற்றி எங்களுடைய நாட்டின் புகழைக் காக்கவேண்டும். இருந்தும் எங்களுடைய முயற்சியைக் கைவிடலாகாது.

உலகத் தொழிலாளரெல்லாம் ஒரே குடும்பமென்பதை அறிவுறுத்தும் இக்காலத்தில் இலங்கையின் முன்னேற்றத்துக்காக உழைத்துவரும் லட்சக்கணக்கான இம்மக்களை, நாடற்றவராக்கியும் அவர்களது குழந்தைகளுக்கு இங்கு கல்வி, இலவசப்பால் முதலிய வசதிகளை மறுத்தும் வேற்றுமைப்படுத்துவதைப்பற்றி இங்குயாரும்பெருமைகொள்ள முடியாது. ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் அடிப்படை விதிகளுக்கும் இது மாறுபட்டதாகும். சில சுயநல அரசியல் வாதிகள்வகுப்புவாதவெறியை இங்கு தொழிலாளர் சமூகத்திலும் புகுத்தி அவர்களைப் பிரித்து ஒதுக்கிவிட முயற்சி செய்துவருவதைப் பார்க்கின்றோம். தொழிலாளர் சமூக ஒற்றுமையிலும் முன்னேற்றத்திலும் உண்மையில் அக்கறை கொண்டவர்கள் இவ்வித முயற்சிகளுக்குச் சற்றும் இடம் கொடுக்க முடியாது.

தொழிலாளர் எந்த சாதி, மத, இனமாயினும்சரி அவர்களுக்குச் செய்யப்படும் பாதகம் தொழிலாளர் சமூகமனத்தையுமே பாதித்து அவர்களைப் பலவீனப்படுத்துவதாகும். இலங்கையிலே மலைநாட்டுத் தொழிலாளர் சமூகத்தில் பெரும்பான்மையோருக்கு அரசியல் முதலிய உரிமைகளை மறுத்திருப்பது, இங்கு தொழிலாளர் முன்னேற்றத்துக்குச் செய்துள்ள பெரிய தீங்காகும். உலகத் தொழிலாளரின் ஒற்றுமைக்காக நடத்தப்படும் மேவிழாவை இங்கு கொண்டாடுபவர் யாராயினும் மலைநாட்டிலுள்ள தங்கள் சகாக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரிய தீங்கை நீக்க முற்படுவது மிகவும் அவசியமாவதுடன், அதனால் இங்கு தொழிலாளர் சமூகத்தைப் பலப்படுத்தி, தங்கள் நன்மையையும் பாதுகாத்துக் கொள்ளுவர்தாக இருக்கும்.

நாட்டுப் பற்று அர்ப்பணம் திறமை போன்றவை இப்படியான சந்தர்ப்பங்களில் இடம் பெறவேண்டும்.

இளைஞர்களில் எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு. எது சரி, எது பிழை என்பதை அவர்கள் விரைவில் அறிய முடிகிறது. அவர்கள் செய்கையிலும் காட்டியுள்ளார்கள் இலங்கையில் சிரமதான இயக்கம் நல்லமுறையில் அமைந்துள்ளது. பல இளைஞர்களை ஒன்றாகச் சேர்த்துள்ளது.

சர்வோதய முறை

இந்த இயக்கம் தொடங்கி கடந்த ஆறு வருடங்களாக, நாங்கள் கிராமத்துக்குக் கிராமம்போய் சர்வோதய இயக்கத்தின் அன்பு அர்ப்பணமும் பற்றி எடுத்துக் கூறிவருகிறோம். மக்களின் சூழ்நிலைமைக் காரணத்தால் சிறந்த குணங்களும் தீய குணங்களும் அடங்கியுள்ளன. பொருளாசையும் ஆதிக்க ஆசையும் மக்களை நல்ல இயக்கங்களைத் தொடங்குவதற்கு இடையூறாக அமைந்துள்ளன. மக்களை நல்ல முறையில் ஒன்று சேர்ப்பதற்கு சில முறைகளைச் செய்து காட்டியுள்ளார்கள். இது மனிதவர்க்கத்தின் கடமையுமாகும். ஒவ்வொருவரிலுமுள்ள நல்லசிறந்த குணங்களைக்கொண்டு சர்வோதய இயக்கத்தின் மூலம் மக்கள் பயன்பெறக்கூடிய முறையில் செய்யத் தெண்டித்து வருகிறோம்.

எங்களுக்கு எந்த விதமான தடைகளோ அல்லது கட்சித் தொடர்போ கிடையாது ஆகையால் எந்த நேரத்திலும் எப்படிப்பட்ட மக்களோடும் சேர்ந்து வாழுவோம். இந்த இயக்கத்திலுள்ளோர் எல்லோரும் ஒரு குடும்பத்தைப் போன்றவர்கள் எல்லா வழிகளாலும் அவர்கள் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் குடும்பம் போலமைந்த இந்த இயக்கத்தில் என்றும் பிளவு ஏற்பட முடியாது.

சாந்தி சேனை இயக்கம்

போதித்தல் மூலம் சாந்தி சேனை இயக்கம்பற்றி மக்களுக்கு எடுத்துக்கூற நாம் விரும்பவில்லை. செய்கை மூலம் மக்களைக் கவரக்கூடிய முறையில் இயக்கத்தை வளர்ப்பதே நமது நோக்கம்அப்போதுதான் எல்லாரும் ஒன்று என்ற மனப்பான்மையை ஏற்படுத்த முடியும் இந்த இயக்கத்திலுள்ள நாலு பேர்வரையில் இயக்கத்தின் நேர்மையையும், நன்மையையும் நன்கு உணர்ந்துள்ளவர்கள் இவர்கள் ஒவ்வொரு கிராமப்பகுதிகளுக்கும் சென்று மக்கள் இவைகளை நன்கு உணரும்வகையில் செய்கைமூலம் காட்டுவார்கள். ஒரு நல்ல சமூகத்தை ஏற்படுத்தும்வரை எங்களுடைய இயக்கத்தை நிறுத்தமாட்டோம்.

ஒரே கிராமம் ஒரேகுடும்பம்

அரசியல் கட்சிகளில் மக்கள் கவனம் செலுத்துவதால் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைகளில் கஷ்டங்கள் தொந்தரவுகள் ஏற்படுகின்றன. இதற்கு நாங்கள் அரசியல் கட்சிகளைமாத்திரம் பிழைகூறமுடியாது. எங்களையே நாங்கள் குறைகூறவேண்டும். அரசியல் கட்சிகளிலிருந்தோ அல்லது அரசாங்கத்திலிருந்தோ, அவைகள் நடத்தும் முறைகளிலிருந்து, அவைகளிடமிருந்து நல்ல கருத்துக்களைப் பெறமுடியாது. பொருளாதார சுதந்திரத்திலும் அரசியலிலும் உண்டாகிய கெட்ட செய்கைகளும், ஆதிக்கங்களும் மக்கள் சமூகத்துக்கு என்ன செய்யமுடியும்.

இப்படிப்பட்ட செய்கைகளை நாங்கள் நல்ல, சிறந்தமுறைகளைக்கொண்டு நிறுத்தவேண்டும்.

நாம் எல்லோரும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். சிங்களமக்கள் தமிழ்மக்கள் அல்லது இந்தக் கட்சி அந்தக் கட்சி போன்ற பிரச்னைகளுக்கு இடம் இல்லை. நாங்கள் எங்களுடைய மூதாதையேர்களில் சிறந்த ஆசிரியர்களின் போதனைகளைத் திருப்பிப்பார்க்க வேண்டும். அவைகளை, கிராம மக்கள் புரியக்கூடிய முறையில் எடுத்துக்கூறவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள மக்களும் சுதந்திரமாக வாழ வழிவகுக்கவேண்டும். அத்துடன் அவர்களுடைய பிற்காலத்தைப்பற்றி நன்கு தீர்மானிப்பதற்கும் இடம் கொடுக்க வேண்டும். கிராம வாழ்க்கையில், அரசியல் கட்சி சம்மந்தமான அலுவல்கள் இடம்பெற விடக்கூடாது. "ஒரே கிராமம் ஒரே குடும்பம்" என்ற பழங்கால மனப்பான்மை ஏற்பட வேண்டும்.

தற்பொழுது நடந்துவரும் கஷ்டங்களுக்கு சாதி மனப்பான்மைதான் காரணம் என்பதில் திடமான நம்பிக்கை வைத்தல் வேண்டும். அரசியற் கட்சிகளில்தான் இப்படியான சிக்கல்களை நாங்கள் அறிகிறோம். எங்களிடம் எப்படிப்பட்ட அபிப்பிராய வித்தியாசங்கள் தோற்றினாலும் அவைகளை, அரசியலிற் சேராமலும் சாந்தமுறையிலும் அவைகளைத் தவிர்க்கலாம். புத்தர்பெருமான், யேசுநாதர், திருநாவுக்காசு, காந்தி, வினோபா போன்ற பெரியார்களின் வழிகளைப் பின்பற்றவேண்டும்; ஆனால் கிட்லர், முசோலினி போன்றவர்களின் வாழ்க்கையல்ல. அன்பு மூலம் தான் வெறுப்பையும் எதிர்ப்பையும் வெல்லமுடியும்.

வடக்கு மாகாணத்தில் வாழும், அன்பான சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும், ஐம்பதினாயிரம் சேவையாளர்களைக்கொண்ட சர்வோதயஇயக்கத்தின்சார்பில் சில உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நாங்கள் ஒவ்வொருவருக்கும் அன்பு காட்டவேண்டும், சேவை செய்யவேண்டும். எந்தநேரத்திலும் தியாகம் செய்யத் தயாராகவேண்டும்.

—

'சேவை செய்யாவிடில் விலகிவிடவும்'

சமசமாஜ வாலிப முன்னணி யோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி

'யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவர்கள் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். இல்லையெனில் அவர்கள் தமது பதவிகளை விட்டு விலகவேண்டும்.' என வண்ணார்பண்ணை சமசமாஜ வாலிப முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:-

இலங்கையிலுள்ள மாநகர சபைகளில் யாழ்ப்பாணம் மாநகரசபையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடந்தகால நடவடிக்கைகளைக் கவனிக்குமிடத்து இச்சபை பிற்போக்கான நிலையிலேயே உள்ளது. மக்களின் அன்றாடத் தேவைகளான சுகாதாரம், மின்சாரம், லிடில்லாப் பிரச்னை போன்ற விஷயங்களைக் கவனிப்பதற்குச் சபை அங்கத்தினர்களுக்கு நேரமிருப்பதில்லை. இவர்கள் அன்றாட அலுவலாக பதவி, பட்டம், பேரம்பேசுவதனையே கொண்டுள்ளனர் ஒருசில அங்கத்தினர்கள் கொண்டுவரும் நல்ல திட்டங்களைக்கூடச் சபை ஏற்றுக் கொள்வதில்லை. இச் செயல்களைக் கண்டு சமசமாஜ வாலிப முன்னணி வருந்துகிறது.

—

சுவர் சரிந்து 6 பேர் காயம்

கொழும்பு, வியாழன்

புறக்கோட்டையில் சிலர் கட்டிடவேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் 20 அடிச் சுவர் ஒன்று அவர்கள் மீது இடிந்து விழுந்ததினால் ஆறுபேர் படுகாயமடைந்தனர்

ஐயாறன் எழுதுவது

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவிலில் புதிய தேர் கட்டப்பட்டு, அதன் வெள்ளோட்ட விழா நாளை சனிக்கிழமை நடைபெறுவதாக ஓர் அன்பர் வந்து தெரிவித்தார்,

சட்டத்தடைகள் எவ்வளவோ இருந்தும், திருவிடைமருதூரிலிருந்து நான்கு சிற்பாசாரிமார்கள் இங்கு வந்து இருந்து ஒருசில மாதங்களில் இத்தேரை மிக அழகாக அமைத்துள்ளார்களாம். பெரிய தேர் முட்டி உள்ளிட்டு, இதற்கு 80 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாயிற்றென்றும் அறிகிறேன். யாழ்ப்பாணத்தில் கோவில்கள் புத்துயிர்பெற்று வருவதற்கு இது ஓர் அடையாளமாகும்.

* * *

இக்கோவில் சரித்திரப்புகழ் வாய்ந்தது. புராதனமான இக்கோவிலை போர்ச்சுக்கேயர் இடித்து, இதன் கல்லைக் கொண்டு கோட்டை கட்டினார்களாம். அந்தச் சரித்திரக் கதைகள் மட்டுமன்றி, கைலயங்கிரியிலிருந்தே இப்பிள்ளையார் வந்த புராணவரலாற்றையும், தேரிலே மரத்தால் செதுக்கிய அழகான சிற்பங்கள் பார்ப்போர்களுக்குக் கலை அழகுடன் சொல்லுகின்றனவாம். இக்கலைஞர்களுக்கும், இதைப் பக்தியுடன் செய்வித்த சைவ அன்பர்களுக்கும் என் பாராட்டுகள்.

இந்தியாவிலே முன்னாள் இலங்கையின் ஹைகமிஷனராக இருந்த குமாரசாமியாரும், முன்னாள் மந்திரி சுந்தரலிங்கத்தாரும் இத்தேர் கட்டுவதில் அதிக சிரத்தை காட்டியதாகத் தெரிகிறது. இந்தப் பிள்ளையாரை "மை பிரண்ட்" (என் நண்பர்) என்று சுந்தரலிங்கத்தார் அன்புடன்போற்றி, அவர் தம்மை என்றும் கைவிடமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கையும் கொண்டவராம்!

சேது பாலம் கட்ட, ஸ்ரீராமருக்கு அணிற்பிள்ளையும் உதவியதாம். அதுபோல், பல சின்னக் குழந்தைகளும் நடனமாடி காசுசேர்த்து இதற்கு உதவியுள்ளார்கள். வெள்ளோட்டம் நாளை மாலை 5-15 க்கு நடக்கிறதாம். மூடிந்தவர்கள் இந்த மகிழ்ச்சியான விழாவில் கலந்துகொள்ளுமாறு சிபார்சு செய்கிறேன். இப்புதிய தேர் நல்லூருக்கு மேலும் சிறப்பு அளிப்பதாகும்.

* * *

கிளிநொச்சியைச் சேர்ந்த இராமநாதபுரத்தில் குடியேறியுள்ள சின்னத்துரை என்பவர் எழுதியுள்ளதாவது:-

"சாவகச்சேரியில் என் சகோதரி புருஷன் இறந்துவிட்டதாக சென்ற 22-ந் திகதி எனக்கு ஒரு தந்தி வந்தது. அதைக் கண்டதும் செத்தவீட்டுக்குப் புறப்பட்டுச்சென்றேன். ஆனால் அங்கு போனபோது, செத்து மூன்றுநாள் ஆகிவிட்டதாயும், தந்தி கிடைக்க மூன்று நாள் சென்றுள்ளதாயும் அறிந்தேன். 35 மைல் தூரத்திலுள்ள இடத்துக்கு தந்தி வந்துசேர மூன்றுநாட்கள் பிடித்துள்ளது! தந்தி 20-ந் திகதி காலை 11 மணிக்கு அடிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றத்திட்டத்தில் தபால்கந்தோர் இருந்தும், தந்தி கிடைக்க இவ்வளவு தாமதமாகியுள்ளது. குடியேற்ற வாசிகளை இப்படி அலட்சியமாக ஏன் நடத்தவேண்டும்?"

இதுபற்றி "வருந்துவதற்கு ஒன்றுமில்லை. தந்திகள், தபாலில்வரும் காலமிது! ஆகவே தந்தியை நம்பி இராமல் இவ்வித தகவல்களை முன்காலத்தைப்போல் ஆள்மூலம் நடந்து தெரிவிக்க ஒழுங்கு செய்வதே உசிதமாகுமென்று தோன்றுகிறது. சரிதானே!

* * *

சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து தரணியொடு வானுளதாதருவரேனும், மங்குவார்

(5-ம் பக்கம் பார்க்க)

"மொழி வேறுபாடு அரசாங்க ஊழியருக்கு அப்பாற்பட்டது"

அரசாங்கசேவை தொழிலாளர் தொழிற்சங்க காரியதரிசி உரை

சிலாபம், வியாழன்

அரசாங்க ஊழியர்கள் மொழி, வகுப்பு வேற்றுமைகளுக்கு அப்பால் இருக்கவேண்டியவர்கள் அவர்கள் தம்மைப் பாதிக்கும் விஷயங்களை எதிர்ப்பதில் ஒற்றுமைப்பட்டு உழைக்கவேண்டியவர்களாக இருக்கிறார்களென போஸ்ட்மாஸ்டர் யூனியனின் தலைவரும் அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசியுமான திரு. வில்பிரட் பெரேரா இங்கு நடைபெற்ற யூனியனின் 6-வதுபொதுக்கூட்டத்தில்பேசுகையில்கூறினார்

திரு. பெரேரா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தண்டனைகூடாது

அரசாங்க சேவையில் 1956-ம் வருடத்திற்கு முன்னர் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கிருக்கும் வீட்டுத் தொந்தரவுகளுடனும், வயது மற்றும் தொந்தரவுகளுடனும் மூன்று வருடத்தில் சிங்கள மொழியில் ஜே. எஸ். ஸி. வகுப்புக்குரிய தகுதிபெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கமையவே அரசாங்க ஊழியர் செயல்படவேண்டும் என்பது அவர்களது கடமையாகவிருந்தாலும், அரசாங்க ஊழியர்களைத் தண்டிக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்காதிருப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்பது உணரப்படவேண்டும்.

நல்ல தீர்ப்புவேண்டும்

இது ஒரு மனிதப் பிரச்னை. சம்பள உயர்வு நிறுத்தப்பட்டுள்ளவர்களுக்கும் பதவி உயர்வு தடுத்து நிறுத்தப்பட்டவர்களுக்கும் அவர்களுக்குரிய சலுகைகளை அளித்து நல்ல தீர்ப்பு வழங்குமாறு நான் பிரதமரைக் கேட்டுக் கோள்கிறேன்.

வேலை நிறுத்தம்

அரசாங்க ஊழியர்கள் உரிமைகளைப் பெறும் விஷயத்தில் ஒற்றுமையகச் செயலில் இறங்கவேண்டும். சமாதானமான மார்க்கம் திருப்திகரமான முடிவுகளைத் தராதுபோனால் இறுதி ஆயுதமான வேலை நிறுத்தம் உபயோகிக்க வேண்டி நேரிடும்.

சம்பளம் பெறும் ஒவ்வொருவரும் அதிக வரி மூலம் வாழ்க்கைச் செலவின் உயர்வு மூலம் கொல்லப்படுகின்றனர். இந்தவித கஷ்டநிலையிலிருந்து அவர்களுக்கு உடன் நிவாரணம் அளிக்கப்படவேண்டும். ஒன்றில் வரி குறைக்கப்படவேண்டும். அல்லது வாழ்க்கைச் செலவு குறைக்கப்படவேண்டும். இரண்டும் சாத்தியப்படாவிடில் சம்பளம் உயர்த்தப்படவேண்டும்.

'ஷைலக்'காக மந்திரி மாறக்கூடாது

நீதிமந்திரி ஷைலக் போன்று நடந்துகொள்ளக்கூடாது. மொழிக்கொள்கை சம்பந்தமாக அரசாங்க சேவையில் முன்னரே சேர்ந்தவர்களின் "இறைச்சியை" அவர் கோரக் கூடாது.

'வேறு வழியில் பணம் செல்கிறது'

கீழ்த்தர வகுப்பினருக்கு சம்பள உயர்வு கொடுக்கப் பணமில்லை எனக் கூறும் அரசாங்கம் உயர்ந்த பதவியிலிருப்பவர்களுக்குப் பணத்தை அதிகமாகக் கொடுக்கிறார்கள், இந்த வழியில்தான் அரசாங்கத்தின் பணம் செல்கிறது.

இந்தியா இரண்டு கோடியே ஐம்பது லட்சத்திற்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்டிருந்தபோதிலும் 5,000 க்குக் குறைந்தவர்களே நிர்வாக சேவையிலிருக்கிறார்கள். ஆனால் இலங்கையில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இவ்வித நிர்வாக சேவையில் பதவி வகிக்கிறார்கள்.

இங்கிலாந்திலுள்ளது போன்று இலங்கையிலும் இணைக்கப்பட்ட அரசாங்க பொதுச்சேவை இருக்கவேண்டும்.

மீண்டும் இங்கு ஊழல்கள்

உறவினருக்கே சலுகைகளும் ஊழல்களும் இங்கு மீண்டும் தலைதூக்கி நிற்கின்றன. ஆச்சரியப்படத்தக்கவிதத்தில் புதிய வேலைகளில் ஈடுபடும் அரசாங்க பொதுச்சேவை கமிஷன் தனது செயல்களுக்கு யாருக்கும் காரணம் காட்டத்தேவையில்லாத நிலையிலிருக்கின்றது.

சாதாரண தவறுகளைச்செய்பவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் எதுவித தகுதியுமற்றவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

இறந்துபோகும் தறுவாயிலிருந்த தனது சகோதரனைக் காண அவதியாகச் சென்ற போஸ்ட்மாஸ்டரொருவர் உத்தரவுபெறாது காரியாலயத்தை விட்டுச் சென்றதாக சமீபத்தில் தண்டிக்கப்பட்டார்.

தபாற்கந்தோர்களின் நிலைமை பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் திரு. பெரேரா கூறியதாவது:

நோயாளர்போன்று தபாற்கந்தோர்கள்

தபாற்கந்தோர்கள் கவனிக்கப்படாத நோயாளர்கள் போன்று இருக்கின்றன. இதிலிருக்கும் குறைபாடுகள் தீர்க்கப்பாலாமென அனுபவசாலிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் அவற்றை நிவர்த்தி செய்ய இதுவரை தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கம்

சங்கானை, புதன்

ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கத்தின் பத்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சி. தம்பிப்பிள்ளை தலைமையின் கீழ் ஆரம்பமானது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வே. கனகசபாபதி, உபதலைவர்: திரு. சி. இராமலிங்கம், காரியதரிசி: திரு. சி. தம்பிப்பிள்ளை, உபகாரியதரிசி: திரு. ச. நடராசா, தனாதிகாரி, திரு. சி. ஐயாத்துரை. நிர்வாகசபை அங்கத்தவர்களாகதிருவாளர்கள்தா. ஆறுமுகம், ந. காசிப்பிள்ளை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. வி. குலசிங்கம் பேசுகையில் சங்கத்தின் வளர்ச்சி குறித்துப் பாராட்டுவதாகவும் வருங்காலத்தில் மட்கலத் தொழிலை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஏற்ற சிறந்த முறைகளைக் கையாளவேண்டுமென்றும் கூறினார். திரு பொ. செல்வரத்தினம் கூட்டுறவைப்பற்றியும் அதன் பலனைப்பற்றியும சங்கத்தின் வளர்ச்சியும் சங்கத்தினால் நாட்டிற்கு ஏற்படும் பயனைப் பற்றியும் எடுத்துக் கூறினார். திரு. தா. முருகேசு சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றியும் இச்சங்கம் வருங்காலச் சந்ததியினருக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்பதில் நிச்சயமும் அச்சமில்லையென்றும் கூறினார்.

"கூட்டுறவுக்கு ஒற்றுமைவேண்டும்"

ஊர்காவற்றுறை, வியாழன்

"கூட்டுறவு சங்கத்தில் போட்டி மனப்பான்மையோ அல்லது கட்சிமனப்பான்மையோ இருக்கக்கூடாது. அப்படி இருக்குமானால் "கூட்டுறவுச்சங்கம்" வளர்ச்சியடைய இயலாது போய்விடும். எல்லோரும் ஒற்றுமை மனப்பான்மையுடன் நாட்டு நலனுக்குரியவகையில் செயல்படவேண்டும்" என்று யாழ்மேற்கு கூட்டுறவு ஆணையாளர் திரு. பொன்னுத்துரை நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச்சங்க வருடாந்தக் கூட்டத்தில், உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். சங்க உபதலைவர் திரு. இரா சின்னத்தம்பி, கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

நெடுந்தீவு அரசினர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஐக்கிய பரிசோதகர்களும் கலந்து கொண்டனர். யாழ்பாண கச்சேரியைச் சேர்ந்த "லிகிதர்" திரு. மரியநாயம் ஆண்டு அறிக்கையைச் சர்ப்பித்தார்.

வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சண்டிருப்பாய் சீரணி நாகம்மாள் கோவிலின் வருடாந்த மகோற்சவம் வருகிற திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது. அடுத்த மாதம் 8-ந் திகதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேரில் அம்பாள் வீதிவலம் வருவார்.

ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் செல்வம் மதிப்போமல்லோம் மாதேவர்க கேகாந்தரல்லராகில், அங்கமெலாங் குறைந்கழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

—திருநாவுக்கரசர்.

ஒரு லட்சம் மக்கள் மரியாதைசெலுத்தினர்

ஜெருஸலம், ஏப். 25

காலம்சென்ற இஸ்ரேல் ஜனாதிபதி பென்சிவியின் பிரேதம் இன்று ஜெருஸலத்தில் அடக்கம்செய்யப்பட்டது. பிரேத ஊர்வலத்தில் ஒரு லட்சத்துக்குமதிகமான மக்கள் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர். ஜனாதிபதி இறக்கும்பொழுது அவருக்கு 79 வயது.

மரியாதை செலுத்தும்பொருட்டு 27 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

யு. என். பி மேதின விழா

கொழும்பு, வியாழன்

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின நிகழ்ச்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவும், திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் தலைமைவகிப்பார்கள். விகார மகாதேவி பூங்காவிலுள்ள திறந்தவெளி அரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கல்முனையில் தமிழியக்கம் எஸ். ஜே. வி. தொடக்கிவைத்தார்

களுவாஞ்சிக்குடி, வியாழன்

கல்முனைதொகுதியில் எல்லாம் தமிழ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்முனை தபால் நிலையத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், பட்டிருப்பு எம். பி. திரு. எஸ்.எம். இராசமாணிக்கம், தீவுப்பகுதி எம். பி திரு. வி. ஏ. கந்தையா, ஜனாப் மகுர் மௌலானா, செனட்டர் திரு. எம். மாணிக்கம் ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு அனுப்பிவைத்த தந்தியில் இலங்கையில் உள்ள எல்லாத் தபால் நிலையங்களுக்கும் வானொலி உத்தரவு மனுப்பத்திரம், டீசமிப்புப்புத்தகம் பெறும் மனுப்பத்திரம் என்பனவற்றைத் தமிழில் அனுப்பிவைக்கும்படி கேட்டுள்ளார்.

யாத்திரையில் திருமண ஒப்பந்தம்

மணமாகியபின் மணமகனுக்கு சிறை

கொழும்பு, வியாழன்

நுககொடையைச் சேர்ந்த 17 வயது யுவதியான எச் ஜராங்கனி என்பவருக்கும் கொம்பனித்தெருவைச் சேர்ந்த எஸ். பி. முனிதாசா என்ற சாரதிக்குமிடையே யாத்திரையொன்றின்போது திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது.

சென்ற வருடம் ஜூலையில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. ஆனால் இத்திருமணத்தின் சிலநாட்களின் பின்னர்தான் முனிதாசா ஏற்கனவே திருமணமானவரென்ற விஷயம் ஜராங்கனிக்குத் தெரியவந்தது.

இதற்கிடையே இருதார திருமணத்திற்கான குற்றச்சாட்டு முனிதாசாமீது சுமத்தப்பட்டது. கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. டி. கியூ. எம். சிறிமானே முன்னர் முனிதாசா நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது மாஜிஸ்டிரேட் அவருக்கு இருதார மணம் புரிந்த குற்றத்திற்காக 9 மாத கடுழியச் சிறைவிதித்தார்.

ரஷ்யா வரும்படி பிக்குமாருக்கு அழைப்பு

களனி, வியாழன்

ஜூன் மாதத்தில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு சோவியத் யூனியனின் பௌத்த சங்கம், இலங்கையிலுள்ள பிக்குகளுக்கு அழைப்புவிடுத்துள்ளது.

சோவியத் யூனியனின் பௌத்த சங்கத்தின் அழைப்பை ஏற்று ரஷ்யாவுக்குச் செல்லவிருப்பவர்களில், வித்தியோதய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் வண. வெலிவிட்ட சொஹர நாயக்கதேரோ வித்தியாலங்காரபல்கலைக்கழத்தின் டைரக்டர், மற்றும் மூன்று பிக்குமார்கள் இருப்பார்கள். ரஷ்யாவில் சில வாரங்களுக்குத் தங்கியிருக்கும் இவர்கள், கலாசாரம், மதம் போன்றவை பற்றி ஆராய்ந்தறிவார்கள். இவர்கள் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வார்களென தெரியவருகிறது.

லிஸ்டர்பியர்ஸன் லண்டன் செல்வார்

ஒட்டாவா, ஏப். 25

கனடாவின் புதிய பிரதமர் திரு. லிஸ்டர் பியர்ஸன் மே மாத முதல் வாரத்தில் லண்டன் சென்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் மாக்மிலனைச் சந்திப்பார்.

மரத்துடன் கார்மோதி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்கமும் முற்றாக சேதமடைந்துள்ளது

மயக்கமுற்ற நிலையில் இருவரும் இன்றுகாலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் காரின் பின்சீட்டிலிருந்துவந்த பெண்ணின் நிலமையும் மோசமாகவிருப்பதாகக் கூறப்படுகிறது.

மயக்கமுற்ற நிலையிலிருப்பதால் இதுவரை பொலிஸார் வாக்குமூலம் பதியவில்லையென்றும், நித்திரை தூக்கத்தின் காரணமாகவே கார் ஓட்டிவந்த சந்திரதாசா காரை மரத்துடன் மோதியிருக்கவேண்டுமென நம்பப்படுகிறது.

காயமடைந்த சந்திரதாசாவும் இராசனும் இன்று பிற்பகல்வரை மயக்கம் தெளியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சையளித்தபின் காயமடைந்தவர்களில் ஒருவரான இராசன் மயக்கம் தெளிந்தார்.

சந்திரதாசா என்பவர் நெசல்ஸ் கம்பெனியில் வான் சாரதி. இராசன் என்பவர் 'மெர்கன்டயில் பாங்' மனேஜரின் பணியாள். இரு நண்பர்களும் இரவுச் சாப்பாட்டிற்கு முட்டை வாங்கும் நோக்கத்துடன் கண்டிக்குளியிலிருந்து 'நெசல்ஸ்' கம்பெனிக்கு சொந்தமான புதிய காரில் முட்டை வாங்கப் புறப்பட்டார்களெனத் தெரிகிறது.

கார் ஓட்டிச்சென்ற சந்திரதாசா மதுபானம் பாவித்திருந்தார் என்றும், சாவகச்சேரியை நோக்கி எதற்காக போனதென்று தனக்கு தெரியாதென்றும், காரில் இருந்ததாகக் கூறப்படும் பெண்ணைப்பற்றி தனக்கு எதுவும் ஞாபகமில்லையென்றும், மயக்கம் தெளிந்த இராசன் தெரிவித்துள்ளார்.

கார் ஓட்டிச்சென்ற சார்ல்ஸ் சந்திரதாசா இன்னும் மயக்க நிலையிலேயே இருக்கிறார்.

காஷ்மீர் பேச்சு மீண்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகளில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டதாகவும் முக்கியமான அம்சத்தில் இன்னும் அபிவிருத்தி காணப்படவில்லை யென்றும் மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள் தான் இறுதிப் பேச்சுவார்த்தையாக இருக்குமென்று கூறப்படுகிறது.

நேரு-அயூப்கான் சந்திப்புப் பற்றி பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனாப் புட்டோவிடம் இன்று நிருபர்கள் கேட்டபொழுது வேறுபாடுகள் இன்னும் பெரிதாகவே இருக்கின்றன என்றார்.

காஷ்மீர் பிரச்னை மே மாதம் 31-ந் திகதிக்கு முன் தீர்க்கப்பட்டுவிடவேண்டுமென பாகிஸ்தான் நிபந்தனை விதித்ததா? என்ற கேள்விக்கு ஜனாப் புட்டோ பதிலளிக்கையில் அப்படியெதுவும் உறுதியான நிபந்தனை விதிக்கப்படவில்லையாயினும் காஷ்மீர் பிரச்னை விரைவாகத் தீர்க்கப்படவேண்டியது' என்றார்.

தூதுமனுவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதில் உள்ள தாமதம் பற்றியும் இந்திய ஹைகமிஷன் இரண்டாவது காரியதரிசி திரு. என். ராஜ்குமார் இலங்கை அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

கொழும்பு, வியாழன்

இலங்கையிலுள்ள சிரேஷ்ட பாடசாலைகளிலெல்லாம் விடுதி வசதி இருக்கவேண்டுமென்று தேசிய கல்விக்கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

"பாடசாலைகளுக்கிடையில் பேதம் காட்டப்படக் கூடாது

வெளிமாகாணத்தில் சேவைபுரிந்த ஆசிரியரை மே மாதத்தில் இடமாற்றவும்"

அ. இ. அ. பா. தமிழாசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்க வட பிரதேசக் கிளைகளின் விசேஷட மகாநாட்டில் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரத்திடம் ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக பத்துக் கோரிக்கைகளைச் சங்கம் சமர்ப்பித்தது. உதவி வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் விபரம் வருமாறு:-

வெளிமாகாணங்களில் நீண்ட காலம் பலவித கஷ்டங்களின் மத்தியில் சேவை செய்த ஆசிரியர்களில் வடமாகாணத்திற்கு மாற்றம் பெறவிருக்கும் 227 ஆசிரியர்களின் மாற்றங்களும் மே மாதத்தில் செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

அரசினர் பாடசாலை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை, என்ற பேதம் காட்டாது சிங்கள-முஸ்லிம் பாடசாலைகளில் கலந்து மாற்றங்கள் நடைபெறுவதுபோல தமிழ்ப் பாடசாலைகளிலும் கலந்து மாற்றங்கள் நடைபெறவேண்டும். வடமாகாணத்திற்குள் வசதிக்குறைவான கஷ்டமான இடங்களில் நீண்ட காலம் சேவை செய்பவர்கட்கு விமோசனம் அளிக்க வேண்டும்.

வெளிமாகணங்களில் பல வசதியீனங்களின் மத்தியில் சேவை செய்து மாற்றம் பெற்று வருபவர்கள் ஒரு குறிப்பிட்ட காலமாவது சொந்த இடங்கட்கு அண்மையில் சேவை செய்ய வசதி அளிக்கவேண்டும். ஒரே ஆசிரியர் உள்ள பாடசாலையில் அவ்வாசிரியருடைய லீவு மறைமுகமாக மறுக்கப்படுவதால் அப்பாடசாலைகட்குச் சராசரியைக் கவனியாது இன்னொரு ஆசிரியரை நியமித்தல் வேண்டும்.

தீராதநோய்களால் பீடிக்கப்பட்டோரின் மாற்ற விண்ணப்பங்கள் உடனடியாகக் கவனிக்கப்படல்வேண்டும்.

தொழிற்கல்விக்கு முக்கியத்துவம்கொடுத்து உரிய ஆசிரியர்களை வேண்டிய பாடசாலைகட்கு நியமித்துத்தரல் வேண்டும்.

முதலாந்தரத் தலைமை ஆசிரியர் முதலாந்தரப் பாடசாலையிலும் இரண்டாந்தரத் தலைமையாசிரியர் இரண்டாந்தரப்பாடசாலைகளிலும் சேவை செய்யவேண்டும் என்ற நிறைசேரியின் சுற்றுநிருபத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் போது வெளிமகாணங்களில் நீண்ட காலம் சேவை செய்து கஷ்டமனுபவித்து வந்தவர்களுக்குத் தரும்பவும் கஷ்டம் அளிக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடமாற்றங்களால் சம்பளம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுப் பல ஆசிரியர்கள் பெரும் கஷ்டமுறுகின்றனர். இந்நிலையைப் போக்க வேண்டும்.

கயபாஷைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் கயபாஷை ஆசிரியர்களை சிங்கள முஸ்லிம் மகா வித்தியாலயங்களுக்கு அதிபர்களாக நியமிப்பது போலத் தமிழ் ஆசிரியர்களும் நியமனம் பெற்று [illegible] வேண்டும்.

புதிய நெசவு நிலையம்

வேலணை, வியாழன்

வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் கட்டப்பெற்ற புதிய நெசவு நிலையத்தை விரைவில் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வேலணை செட்டிபுலத்தில் கட்டப் பெற்றுவரும் கயிற்றுத் தொழில் நிலையமும் விரைவில் கட்டிடவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு செயல்பட ஆரம்பிக்குமெனத் தெரிகிறது.

26 மைல் தூர ஓட்டப் பந்தயம்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

கொழும்பு, வியாழன்

அதிக தூரமான ஓட்டப் பந்தயம் ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற விருப்பது வடமாகாண விளையாட்டுப் பிரியர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையளிக்கக்கூடியதாக இருக்கும்.

சுமார் 26 மைல் 385 யார் தூர ஓட்டப் பந்தயத்தை யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கம் மே மாதம் 19-ம் திகதி நடத்துவதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவருகிறது.

தங்களது முதலாவது துணிகர முயற்சி வெற்றியடைவதற்கான வேலைகளை, விளையாட்டுச் சங்கம் செய்துவருகிறது.

வடமாகாணத்தில் அதிகதூரம் ஓடும் வீரர்கள் அநேகர் தாங்கள் ஆவலுடன் இப் போட்டியில் கலந்துகொள்ள விருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இதனால் கடுமையான போட்டி ஏற்படுவதோடு, நாட்டின் பல பாகங்களிலிருந்தும், தூர ஓட்ட வீரர்கள் கலந்துகொள்ளுவார்கள் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் மேமாதம் 19-ம் திகதி காலை 6-30 மணிக்கு ஓட்டப் பந்தயம் ஆரம்பமாகும்.

திருவள்ளூர் யானை மரணம்

திருவள்ளூர், ஏப். 22

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ சுவாமி கோயில் யானை திடீரென இறந்துவிட்டது. ஆறு மாதமாக அது சுகயீனமாக இருந்தது. ஒருநாள் திடீரென்று அதற்கு ஜலதோஷம் ஏற்பட்டு சங்கிலிகளை அறுத்துக்கொண்டு தன்னை அடைத்துவைத்திருந்த (வசந்த மண்டபம்) இரும்புக் கதவுகளையும் உடைத்துக்கொண்டு யானைபபாகனைத் துரத்த ஆரம்பித்தது. பாகன் அதை அடக்கச்செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. கடைசியில் வசந்தமண்டபத்தைச் சுற்றிச் சுற்றி ஓடி ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு சுவாமியை எழுந்தருளச்செய்யும் இடத்துக்குவந்து படுத்துகொண்டு 'ஓ' வென்று கத்திச்கொண்டே உயிர்விட்டது. சுவாமிபக்கத்தில்உயிர்விட்டதால் அதுதெய்வாம்சம் பொருந்தியது என மக்கள் கருதி அதற்குப் பூமாலை போட்டு வணங்கிச்சென்றனர்.

இதன்பின் வசந்தமண்டபத்திற்கு அருகில் பெரிய குழி தோண்டி அதை கோயில் மரியாதையுடன் புதைத்தனர். இந்த யானைக்கு 38 வயது.

புதிய நிர்வாகிகள்

தெல்லிப்பழை, வியாழன்

தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்கசன சமூக நிலையத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. கே. வி. என். புலேந்திரன், காரியதரிசி: திரு. பெ. தியாகராஜா, தனாதிகாரி: திரு. க. கிருஷ்ணர், உபதலைவர்: திரு. க. இராசரத்தினம், உப காரியதரிசி: திரு. ச. பராஜசிங்கம், உபதனாதிகாரிகள்: திருவாளர்கள் ஏ. கந்தசாமி, சி. கதிரமலை, நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

நாடகம் பார்த்தவரை பொலிசார் தாக்கினராம்

மாவிட்டபுரம், புதன்

நாடகம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் பொலிஸாரினால் தாக்கப்பட்டதாகவும் இதன் காரணமாக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென்றும் தெரிகிறது. கரவெட்டியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது காயமடைந்தவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

கரவெட்டி மேற்கு நுகவில் வாசியான விசுவலிங்கம் சித்திரபுத்திரன் (23 வயது) என்பவர் அத்துளு அம்மன்கோவிலில்நடைபெற்ற 'அரிச்சந்திரா' நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் நடராசா தலைமையில் காரில் சென்ற பொலிஸார் காரை சித்திரபுத்திரனுக் கருகில் நிறுத்தினரென்றும் உத்தியோக உடையில் இருந்த சார்ஜண்ட் நடராஜா காரைவிட்டு முதலில் இறங்கி சித்திரபுத்திரனின் முகத்தில் அடித்தாரென்றும், சித்திரபுத்திரன் கீழே விழ சாதாரண உடையிலிருந்த இரு பொலிஸார் சித்திரபுத்திரனை மேலும் தாக்கி காரில் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டு சென்று பொலிஸ் நிலையத்திலும் வைத்துத் தாக்கினர்களென்றும் பின் அவர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துசெல்லப்பட்டு மறுபடியும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டு 'லாக்கப்' பில் வைக்கப்பட்டாரென்றும் மறுநாட்காலை பொலிஸ்நிலைய அதிகாரி திரு. த. கந்தையாவினால் சித்திரபுத்திரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டாரென்றும் கூறப்படுகிறது. சித்திரபுத்திரன் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வி. டி. குணவர்த்தனாவிடம் சென்று பொலிஸார் தம்மைத் தாக்கியதாக முறைப்பாடு செய்தார். பின் காங்கேசன்துறைப்பொலிஸாரினால் அவர் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் இதுசம்பந்தமாக விசாரணை நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

மேற்கத்திய சங்கீதத்தால் வெளியேறும் பணம்

சென்ட்சபைக்கு வரும் கேள்வி

கொழும்பு. வியாழன்

மேற்கத்திய சங்கீதப் பரீட்சைசம்பந்தமாக பெருந்தொகையான பணம் வெளியில் செல்கிறதென்றும் இதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது பற்றி சென்ட்ர் பி. எச். டுனுவில இம்மாதம் 30-ந் திகதி சென்ட்சபை கூடும்பொழுது சபை முதல்வரிடம் கேட்பார். அவர் பின்வருமாறு கேள்விகளைக் கேட்பார்.

லண்டன் திரித்துவ சங்கீதக் கல்லூரி, லண்டன் ரோயல் சங்கீதப் பாடசாலைகள், கூட்டுச் சபை ஆகியவற்றின் சங்கீத, சொற்பொழிவுத் தேர்வுகளை இலங்கையில் நடத்துவதற்காக மிகத் தொகையான பணம் வருடாந்தம் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகின்றதென்பதை மூதவை முதல்வர் அறிவாரா?

சங்கீத, சொற்பொழிவுத் தேர்வுக்காக கடந்த மூன்று வருடங்களாவ்வொன்றிலும் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்ட பணத்தொகைகள் யாவை?

எழுத்துமூலத் தேர்வு வினாத்தாள்கள் இங்கிலாந்தில் தயாரிக்கப்படுவதாலும் நேர்முகத் தேர்வு ஆங்கில மொழியிலிருப்பதாலும் தற்பொழுதைய பயிற்று மொழிகள் சிங்களம், தமிழ் ஆகியவையாயிருக்கும் காரணத்தால் சிங்கள, தமிழ் தேர்வு நாடிகள் பாதிக்கப்படுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

வெளிநாட்டுச் செலாவணிச் சிக்கனத்திற்காக இலங்கையில் மேற்கத்திய சங்கீத, சொற்பொழிவுக் கல்லூரியொன்றை ஏற்படுத்துவதன் பேற்றை அமைச்சர் ஆராய்வாரா?

இக் கல்லூரிகளை திறமையாகவும் வெற்றிகரமாகவும் நடாத்தியதற்கு இலங்கையில் போதியளவு வல்லமையுண்டென்பதை அவர் அறிவாரா?

கூட்டாக இணைந்து தேர்தல் பிரசாரம்

சென்னியா, ஏப். 25

சென்னியா ஆபிரிக்க ஜனநாயக யூனியனும், ஆபிரிக்க தேசிய சமாதான யூனியனும் கூட்டாக இணைந்து தேர்தல் பிரசாரங்களை நடத்த முடிவு செய்துள்ளது. இரண்டு யூனியனும் முக்கியமான அரசியல் கட்சிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊவாமாகாண தெரிவுக் கோஷ்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊவாமாகாண கைப்பந்தாட்ட தெரிவுக் கோஷ்டியொன்று யாழ்ப்பாணம் வந்திருக்கிறது. இத் தெரிவுக் கோஷ்டி, இவ்வாரத்தில் இங்கு பல கோஷ்டிகளுடன் விளையாடும்.

இன்று குரும்பசிட்டியில், ஊவாமாகாணத் தெரிவுக் கோஷ்டி, காங்கேசன்துறைத் கோஷ்டியை எதிர்த்து விளையாடும். நாளை 27-ம் திகதி, குரும்பசிட்டிக் கோஷ்டியை தெரிவுக்கோஷ்டி எதிர்த்து விளையாடும். இப் போட்டி குரும்பசிட்டியில் நடைபெறும். 28-ம் திகதி உடுவிலில், உடுவில் கோஷ்டியை ஊவா தெரிவு கோஷ்டி எதிர்த்து விளையாடும். 29-ம் திகதி சுன்னாகம் கோஷ்டியை தெரிவுக் கோஷ்டி எதிர்த்து விளையாடும். இந்தப் போட்டி சுன்னாகத்தில் நடைபெறும்.

இந்தக் கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, யாழ்ப்பாண ஜெயசக்தி மன்றத்தினரின் ஆதரவில் நடைபெறுகிறது.

விளையாட்டு விழா

வேலணை, வியாழன்

புளியங்கூடல் சனசமூக நிலையத்தின் சார்பில் எதிர்வரும் மே மாதம் ஐந்தாம் திகதியன்று விளையாட்டுவிழா ஒன்று நடைபெறவிருக்கிறது. யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர் தலைமையில் புளியங்கூடல் புதுவெளி மைதானத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி விழாவில் மாட்டுச்சவாரி, டிராக்டர் யந்திர உழவுப் போட்டி, விளையாட்டுப்போட்டிகள், மெதுவான சைக்கிள் ஓட்டம், ஒரு மைல் ஓட்டமென்பன நடைபெறவிருக்கிறது. உழவுயந்திரப் போட்டியிலும் லேடன் தீவைச் சேர்ந்த யாவரும் பங்குபற்ற முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் விழுந்து தற்கொலை

நோயும், தந்தையின் மரணமும் காரணம்

யாழ்ப்பாணம். வியாழன்

எட்டு ஆண்டுகாலமாக க்ஷய ரோகத்தின் வேதனையில் சிக்கித் தவித்த ஒருவர் பண்ணைக் கடலில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் செல்லத்துரை (38 வயது) நேற்று முன்தினம் காலை பண்ணைக் கடலில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார். காலஞ்சென்றவருக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். இவரின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

செல்லையா நடராஜா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "நான் கடையில் தேநீர் குடித்துக்கொண்டிருக்கும் போது, கடலில் ஒருவர் மிதந்து செல்வதாக சிலர் சத்தம் போட்டார்கள். நான் கடற்கரையை நோக்கி ஓடினேன் செல்வராசா என்பவர் நீந்திச் சென்று அவரை ஒரு வள்ளத்தின் உதவியால் கரை சேர்த்தார். கரைக்கு கொண்டுவந்த போது அவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார். பின்பு அவரின் இனத்தவர்கள் வந்து அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள்."

காலஞ்சென்றவரின் மைத்துனர் சபாபதி நடராசா சாட்சியமளித்தபோது கூறியதாவது: "இறந்தவர் எனது மைத்துனர். யாழ்ப்பாணம் பவர் கவுஸ் ஒழுங்கையில் வசிப்பவர். இவருக்கு நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள். மனைவியும் குழந்தைகளும் உரும்பிராயில் இருக்கிறார்கள். கடந்த 8 வருடமாக இவர் காசநோயால் பீடிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியங்கள் செய்தும், நோய் மாறாத காரணத்தால் மனம் நிம்மதியின்றி வாழ்ந்தார். இரண்டு மாதத்திற்கு முன்பு இவரின் தகப்பனார் காலமானார். அதன் பின் அவர் யாழ்ப்பாணத்திலேயே வசித்தார்.

சம்பவம் நடந்தன்று காலை நல்ல அழகாக உடையணிந்து பண்ணை ஆஸ்பத்திரிக்கு ஊசி போடப் போவதாகத் தாயிடம் கூறினர். தகப்பனார் இறந்தபின் இவரின் நோயும் அதிகரிக்கத்தொடங்கியது. தனது தகப்பனார் இறந்ததாலும், தனது நோய் அதிகரித்ததாலும், சில நாட்களாக நிம்மதியின்றி அலைந்தார்."

பிரேத பரிசோதனை செய்த சட்ட வைத்தியர் திரு. வைத்தியலிங்கம் நீரில் மூழ்கியதால் மரணமேற்பட்டதெனக் கூறினர்.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சீனத் தலைவர்

ரங்கூன், ஏப். 25

பர்மாவுக்கு விஜயம் செய்துள்ள சீனத் தலைவர் நேற்று பர்மிய புரட்சித் தலைவர் நீவினை சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 26-4-63

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநிகழ்ச்சி, 7-15 எஸ். சோமாஸ்கந்தன் — பக்திப் பாடல்கள், 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை,

இரவு 7-00 ஞானஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 லீலா துரை சிங்கம் பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை. 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-40 வாத்தியஇசை, 1-50 சுரவிசை, 2-10 இசைக்கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 காந்தி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம் — சித்திரம், 7-45 டி. எம். தியாகராஜன் — பாட்டு, 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 இசைமாலை.

தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

திருக்கோணமலை, வியாழன் திருக்கோணமலை மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீலங்கா ஏற்றுமதி இறக்குமதி விவசாயத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் திரு. ஆர். எம். ஜி. தஸ்தக்கீர் தலைமையில் நடைபெற்றது இவர் தமது தலைமையுரையில் தொழிலாளரின் கஷ்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

வழக்கறிஞர் சி. ஆர். சந்திரபாலன், திருவாளர்கள் கே. சாமி, எஸ். நடராஜா, எம். சற். ஏ. பாருக், தா. சீ. வில்வராஜா ஆகியோரும் பேசினர். ஜனப் ஏ. எஸ். ஏ. அலி நன்றி கூறினர். இக்கூட்டம் திருமலை புனித வளவனார் ஆங்கிலக் கல்லூரி மணடபத்தில் நடைபெற்றது.

சரஸ்வதி நாடகமன்றம்

மீசாலை, வியாழன் "நாடு என்று பேசுமிடத்து ஒரு ஜீவதளையுள்ள சமுதாயம் வாழுமிடத்தைத்தான் குறிப்பிடுகிறோம். அங்கு வசிக்கும் மக்களின பண்பு, கல்வி, கலாச்சாரம் முதலியயனதான் அந்நாட்டின் சிறப்புக்கள். மக்களின் இயல்பைக்கொண்டுதான் நாட்டின் இயல்பைக் கணிக்க முடியும்" இவ்வாறு சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் கைதடி ஸ்ரீ சரஸ்வதி நாடக மன்றத்தால் தயாரிக்கப்பட்ட சங்கிலியன் நாடகத்தை ஆரம்பித்துவைத்துப் பேசும்போது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நம் முன்னோர்கள் பண்டைக்காலத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் வளர்க்கப்பட்டதென்று வரலாறு கூறுகிறது. ஆனால் இடைக்காலத்தில் அந்நியர் ஆட்சியில் வளர்ச்சி குன்றி, மகிமையிழந்துபோன தமிழுக்கு ஆக்கம்தருவதற்குப் பல அறிஞர்கள், கலைஞர்கள் தோன்றினர்கள், தோன்றிக்கொண்டேயிருக்கிறார்கள்".

ஸ்ரீ சரஸ்வதி நாடகமன்றத் தலைவர் திரு. கா. கந்தையாவும் பேசினர். திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

திருநாவுக்கரசர் குருபூசை

தொல்புரம், வியாழன் "மனிதன் துக்கத்திற்குக் காரணம் ஆத்ம சொரூபத்தை அறிந்து கொள்ளாததுதான். அதனை அறிந்துவிட்டால் சஞ்சலமின்றி வாழலாம். உங்களுக்குள்ளே இருக்கும் பரமாத்மாவைக் காணவேண்டும்"

தொல்புரம் மத்திய சனசமூகநிலைய வாசிகசாலையின் ஆதரவில் தொல்புரம் அ. மி. பாடசாலையில் நடைபெற்றதிருநாவுக்கரசுநாயனார் குருபூசை விழாவில் பேசிய நிலையச் சமய பாட வகுப்புத் தலைமை ஆசிரியர் திரு. கோ. கிருஷ்ணர் மேற்கண்டவாறு கூறினர்.

நிலையத் தலைவர் திரு. சி. சிவப்பிரகாசம் இக் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். திரு. சி. வரதராஜா, திரு. ச. கந்தையா ஆகியோரும் பேசினர்.

∴ ∴ ∴

உடுப்பிட்டி, திங்கள் நெல்லியடி அறநெறிக் கழகத்தினரால் திருநாவுக்கரசு நாயனரின் குருபூசை முன்னாள் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு க. கந்தப்பு தலைமையில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்றது. பிரதம பேச்சாளராக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் க. கார்த்திகேயன் வலந்துகொண்டார்.

∴ ∴ ∴

ஊர்காவற்றுறை, வியாழன் "சைவமும் தமிழும் தழைத்தோங்க நாயன்மார்களின் வாழ்க்கையை நாம் நன்கு போற்றவேண்டும். நால்வரும், நாவலரும் இன்றேல் சைவசமயம் வளர்ச்சிபெற்றிருக்காது. அவர்கள் காட்டிய வழியிற் சென்றுநாம் சமயப்பணிகளைச் செய்யவேண்டும்சைவசமயவளர்ச்சிக்காக சைவ சங்கங்கள் சமய குரவர்களின் குருபூசை விழாக்களை நடத்தவேண்டும்"

இவ்வாறு சமீபத்தில் வேலணைச் சைவசங்க ஆதரவில், வேலணை மேற்கு காந்திஜீ சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனர் குருபூசை விழாவிம் குத் தலைமைவகித்த மேற்படி சங்கத் தலைவர் திரு. வி. பேரற்பலம் தமது தலைமையுரையின் போது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் திருநாவுக்கரசரின் சரித்திரத்தை சிறப்பாக எடுத்துரைத்தார். விசேஷ பூசை, ஆராதனை, மகேசுரபூசை என்பனவும் நடைபெற்றன.

அரசாங்க பொது சேவைக்கமிஷன்

இடமாற்றங்களை மேற்கொள்ளும்

கொழும்பு, வியாழன் சிவில்சேவை முறை ஒழிக்கப்பட்டு இணைக்கப்பட்ட ஐக்கிய நிர்வாக சேவைமுறை இயங்கத் தொடங்கியதும் பொதுப்படையான இடமாற்றங்களை அரசாங்க பொதுச் சேவைக் கமிஷன் மேற்கொள்ளும்.

திறைசேரியுடனும் மற்ற அரசாங்க இலாகாக்களின் அதிபர்களுடனும் கலந்தாலோசித்தே இவ்வித இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

10 கோஷ்டிகள் கலந்துகொள்கின்றன

சுன்னாகம், வியாழன் கந்தரோடை சனசமூகநிலையம் முதலாவது ஆண்டாக நடத்துகின்ற டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக்கிண்ண கைப்பந்தாட்டப் போட்டிக்கு மொத்தம் பத்துக் கோஷ்டிகள் விண்ணப்பித்திருக்கின்றன. இச் சுற்றுப்போட்டி வருகிற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து சுமார் இரண்டு வாரங்களுக்கு நடைபெற இருக்கின்றன. இக்கோஷ்டிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப் போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிக்கு டாக்டர் சுப்பிரமணியம்வெற்றிக்கிண்ணம் அன்பளிக்கப்படும். அநேகமாக இறுதி ஆட்டம் மேமாதம் கடைசியில்நடைபெறும். இறுதி ஆட்டத்திலே பரிசளிப்பு வைபவமும் நடைபெறும்.

இக்கைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் கோஷ்டிகள் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதலாம் பிரிவில் ரோசறி உடுவில், ஸ்ரீலங்கா உடுவில், தையிட்டி ஸ்ரார்ஸ், ரொக்கெற் 'ஏ' சுன்னாகம், காந்தி ஸ்ரார்ஸ் உடுவில் கோஷ்டிகளும், இரண்டாம் பிரிவில் ஸ்ரார்ஸ் உடுவில், ஸ்ரீமுருகன் மல்லாகம், எல்லாளனகிளப் கொக்குவில், ரொக்கெற் 'பி' சுன்னாகம், யூனைற்றெற் நீர்வேலி கோஷ்டிகளும் அடங்கும்.

மாட்டுச் சவாரிப் போட்டி

தங்கப்பதக்கம் பரிசு

ஊர்காவற்றுறை, வியாழன் யாழ்ப்பாணம் மாவட்ட சனசமூகங்களின் சமாதானத்தின் சார்பில் 11-5-63 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கும் மாபெரும் மாட்டுவண்டுச் சவாரிப்போட்டியில் முதலிடம் பெறும் வண்டிக்கு 'தங்கப் பதக்கம்' பரிசளிக்கப்படவிருக்கிறது.

கந்தளாய் தபாற்கந்தோரின் அவலநிலை

திருக்கோணமலை, வியாழன் கந்தளாய், கந்தளாய்க் குடியேற்றப்பகுதிகள், கந்தளாய்ச் சீனித் தொழிற்சாலை களிலிருக்கும் பகுதிகள் ஆகிய எல்லா இடங்களுக்கும் சேவைபுரியும் கந்தளாய் தபாற்கந்தோர் நாற்பது அடி நீளம் பதினைந்தடி அகலம் கொண்ட சிறு கட்டிடமொன்றில்தான் இன்னமும் பணிபுரியவேண்டியுள்ளது. பதினையாயிரத்திற்கு அதிகமான மக்களுக்குச் சேவைபுரியும் கந்தோரிலிருந்து கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற வெளியூர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள வேண்டுமானால் திருமலை தபாற்கந்தோரிலுள்ளதொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தினூடாகத்தான் தொடர்புகொள்ள வேண்டியிருக்கின்றது. கந்தளாயிலிருந்து இருபத்திநான்கு மைல் தூரத்தில் உள்ள திருகோணமலையுடன் தொலைபேசித் தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஆகக் குறைந்தது இரண்டு மணித்தியாலயங்கள் எடுக்கின்றது. கந்தளாயிலிருந்து வெளியூர்களுடன் தொடர்புகொள்ள நேரடித் தொலைபேசித் தொடர்பு வசதி செய்து தருமாறு கந்தளாய் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பலமுறை கேட்டும் பலன் தரவில்லை. கந்தளாய் தபாற்கந்தோரை திருத்தியமைத்துத் தருமாறு கந்தளாய் மக்கள் தபால் தந்திப் பகுதியினரை இம் முறையும் வேண்டியுள்ளனர்.

மாமைட் எனக்கும் என் குடும்பத்துக்கும் நற்சுகமும் பெலனும் தருகிறது.

நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறோம். பலத்திற்கும்வீரத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானால் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல் அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மைமாட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.

மாமைட்

"தமிழ்தொடர்பு சிங்கள சட்டத்தை பயனற்றதாக்கும்"

பெரியபோரை தீவில் திரு. எஸ். ஜே. வி. பேச்சு

களுவான்சிக்குடி, வியாழன்

"நாம் நமது தொடர்புகள் அனைத்தையும் தமிழிலேயே செய்வோமானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களம் மட்டும் சட்டம் படுதோல்வி யடைந்துவிடும்" என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பெரிய போரைதீவில் நடைபெற்ற தமிழியக்கவாரப் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பெரியபோரைதீவு ஸ்ரீ பத்திரகாளியம்பன் ஆலயவீதியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. பூ. செல்லத்துரை தலைமை வகித்தார்.

திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசியதாவது:-

சிங்கள ஆதிக்க வெறிபிடித்து இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்கள்மீது தனிச் சிங்களச் சட்டத்தை திணித்து எம்சமூகத்தை அடிமையாக்க ஆளும் கட்சியினரும் பெரும்பான்மைச் சமூகமுமாகிய சிங்களச் சகோதரர்களும் திட்டம் தீட்டிவரும் வேளையில், அரசாங்கத்துடனும், வர்த்தகத்துறையிலும் நாம் நடத்தும் தொடர்புகள் அனைத்தையும் தமிழிலே நடத்தினால் ஆளும் கட்சியினர் தமிழிலே பதில் அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து இருந்தமையினால்தான் பெரும்பான்மை அரசியல்வாதிகள் எங்கள் உரிமைகளைப் பறிக்க காரணமாய் இருந்தது. ஆகவே தமிழ்ப்பேசும் சமுதாயம் ஒன்றுசேர்ந்து எங்கள் உரிமைகளைப்பெற சாத்வீகப் போராட்டம் தொடங்கவேண்டும். இப்போராட்டத்தின் முதற்படிதான் எல்லாம் தமிழ் இயக்கம் உலக சட்டவரம்பிலேயே ஒருமொழி பேசும் சமுதாயத்திற்கு அந்த மொழியிலேயே கல்விபுகட்டவேண்டும் என்ற நியதி இருக்க அதை மீறி மலைநாட்டுத் தமிழ்க்குழந்தைகளுக்கு சிங்களத்திலேயே கல்விபுகட்டப்பட வேண்டுமெனத் தீர்மானித்திருப்பது உண்மையிலேயே மனம் வருந்தக்கூடிய செயலாகும்.

ஜனாப்மசூர்மௌலானா உட்படபலர் பேசினர்.

அரிசிக் கப்பல் காங்கேசன்துறை வந்துள்ளது

காங்கேசன் துறை, வியாழன்

காங்கேசன் துறையில் கப்பலில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. கொழும்பிலிருந்து வந்துள்ள இக்கப்பலில் 70,000 மூடை மில்சாட் அரிசி வந்திருக்கிறது. எக்பேக்' என்னும் பெயருடைய இக்கப்பலிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் பொறுப்பினை கூட்டுறவுச்சங்கமொன்று பொறுப்பெற்றுள்ளது.

காங்கேசன்துறையில் கப்பல் இறக்குமதியை ஒரு கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்று நடத்துவது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது. சுமார் 12 படகுகள் இறக்குமதி வேலையில் ஈடுபட்டுள்ளன. சுமார் 500 தொழிலாளர்கள் வேலை செய்துவருகின்றன. இவ்வருடத்தில் காங்கேசன்துறைக்கு வந்துள்ள உணவுக்கப்பல் இதுவாகும்.

ஆஸி. தூதராக முத்துக்குமாருநியமனம்

கொழும்பு, வியாழன்

மேஜர் ஜெனரல் ஏ. எம். முத்துக்குமாரு ஆஸ்திரேலியாவில் இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாடு செல்ல அனுமதி மறுப்பு

கொழும்பு, வியாழன்

இரத்தினபுரி எம். பி. திரு. தனபாலா வீரசேகரா இந்தோனேஷியா செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வெளிநாடு செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு மறுத்ததே இதற்கு காரணமாகும்.

இந்தோனேஷிய கலாச்சார வெளியுறவுச் சங்கம் அங்கு நடைபெறும் மகாநாடொன்றில் கலந்து கொள்ளும் படி ஐந்து பேரை அழைத்திருந்தது. திரு. தனபாலா வீரசேகராவும் அந்த ஐவரில் ஒருவராவர்.

தொழில் நுட்ப ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

கொழும்பு, வியாழன்

போலந்து அரசாங்கத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்குமிடையே இன்று தொழில் நுட்ப பொருளாதார ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. 2,850,000 பவுண் பெறுமதிக்கு கைத்தொழில் இயந்திரங்களையும், உபகரணங்களையும் இலங்கைக்கு கடனாக வழங்க போலந்து அரசாங்கம் இந்த ஒப்பந்தம் மூலம் ஒப்புக்கொண்டுள்ளது. இக்கடன் இரண்டரை சதவீத வட்டியுடன் இலங்கை அரசாங்கத்தினால் திருப்பிக் கொடுக்கப்படும்.

இந்தப் பொருளாதார தொழில் நுட்ப ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லையும், போலந்து அரசாங்கத்தின் சார்பில் போலந்து வெளிநாட்டு வர்த்தக உதவி மந்திரி திரு. புறகிவிஸ்ஸும் கையொப்பமிட்டனர். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது திறைசேரிக் காரியதரிசி திரு. ஷேர்லி அரமசிங்காவும் போலந்து ஸ்தானிகர் திரு. ஓகோர்ட்சிகியும் பிரசன்னமாயிருந்தனர்.

சீனரைத் தாக்கிய 5 இலங்கையர் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்

கொழும்பு, வியாழன்

சென்ற திங்கட்கிழமை இரவு பம்பலப்பிட்டியிலுள்ள 'கிரேட் வால் ஹோட்டல்' என்ற சீன ஹோட்டல் சொந்தக்காரரான திரு. சூ சௌ என்பவரைத் தாக்கி அவரிடமிருந்து 900 ரூபாவும் ஒரு தச்சுச் சங்கிலியும் வழிப்பறிசெய்தது சம்பந்தமாக ஐந்து நபர்கள் நேற்று ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

திங்களன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமுற்ற திரு. சௌ இப்பொழுது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

கொழும்பு, வியாழன்

செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றை இறக்குமதி செய்பவர்களை 1959-ம் ஆண்டு தொடக்கம் 1961-ம் ஆண்டு வரையான காலத்தில் உள்ள எந்த வருடத்திற்கான இறக்குமதி விபரத்தையாவது சமர்ப்பிக்கும்படி ஏற்றுமதி இறக்குமதிகட்டுப்பாட்டதிகாரி கேட்டுள்ளார்.

அதிகாரியின் உத்தரவுப்படி விபரங்களை அறிவிக்கத் தவறும் இறக்குமதியாளர்களுக்கு எதிர் வரும் 30-6-63 விருந்து இறக்குமதி கோட்டா பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பார்லிமெண்ட் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலகுவதற்கான காரணங்களை தெரிவிப்பதற்கு திரு. கருணரத்னவை அனுமதிக்குமாறும், தான் முன்னர் விலகிய பொழுது பேச அனுமதிக்கப்பட்டதாகவும் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். மந்திரியோ, அல்லது எம். பி. யோ காரணம் காட்டிப் பேசுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அது அவர்களுடைய உரிமையென்றும் திரு. ராஜரத்ன குறிப்பிட்டார்.

சபாநாயகர் (திரு. கருணரத்னவை நோக்கி): 'நீங்கள் என்னை எனது அறையில் சந்தித்திருக்கலாம்.'

கருணரத்ன: "நான் ஒரு தந்தியை உங்களுக்கு அனுப்பி வைத்திருந்தேன்."

சபாநாயகர்: "நான் அப்பொழுது கொழும்பில் இருக்கவில்லை."

கருணரத்ன: "அது என்னுடைய பிழையல்லவே! இவைகள் எல்லாம் கவனிக்கப்படுகின்றனவா என்பதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்."

அங்கத்தவர்கள் பலரும் திரு. கருணரத்னவை பேசுவதற்கு அனுமதிக்கவேண்டும் என வாதாடியபொழுது, எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் கரகோஷம் செய்து ஆதரவு தெரிவித்தார்கள்.

திரு. கருணரத்ன சபாநாயகரை அவரது அறையில் சந்திக்கும்பொருட்டு சபையை ஒத்திவைக்கலாம் என திரு. ஸ்டான்லி திலகரத்ன ஆலோசனை தெரிவித்தார்.

திரு. நாகநாதன்:- "நேரத்திற்கு ஒருவிதமாக நீங்கள் உத்தரவு பிறப்பித்தால் நாங்கள் எவ்விதம் உங்களுக்கு மரியாதை செய்யமுடியும்."

சபாநாயகர்:- "நான் எனது உத்தரவை பிறப்பித்துள்ளேன்."

எதிர்க்கட்சியினர்:- "இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது."

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஸ்டீபன் சமரக்கொடி, விஜேயபாகு விஜயசிங்கா, எஸ். பி. விக்கிரமசிங்கா, ஸ்டான்லி மொலிகொட ஆகியோரும் திரு. கருணரத்னவை விளக்கம் கொடுத்துப் பேசுவதற்கு அனுமதிக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொண்டனர். பின்னர் ஸ்டான்லி மொலிகொட சபை ஒத்திவைக்கப்படவேண்டும் எனத் தீர்மானம் கொண்டுவந்தார். சபையில் குழப்ப நிலை தொடர்ந்தும் காணப்பட்டது.

பின்னர், 3-30 மணிக்கு சபாநாயகர் சபையை பதினைந்து நிமிட நேரம் ஒத்திவைத்து கருணரத்னவை தனது அறையில் வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். மீண்டும் 3-45க்கு சபை கூடியதும் திரு. அசோகா கருணரத்ன தன்னைப் பேச அனுமதித்ததற்காக சபாநாயகருக்கு நன்றி தெரிவித்தார். மீண்டும் 3-50 மணிக்கு தேநீர் இடைவேளைக்காக சபை ஒத்திவைக்கப்பட்டது.

பொலிஸார் தூங்கினதால் பொருள்கள் பறிபோயின

ருகம, வியாழன்

இரவு ரோந்து வேலையிலீடுபட்டிருந்த ஜாஎல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் களைப்புக் காரணமாக ஒரு கடை விறாந்தையில் படுத்து நித்திரையாகிவிட்டார்கள். ஆனால் விழித்தெழுந்தபோது அவர்களின் தொப்பிகளும் குண்டாந்தடிகளும் திருட்டுப் போய்விட்டதைஅறிந்தார்கள்.

அந்த இடத்தால் சென்றவர்கள் யாரோ இவர்கள் நித்திரை செய்வதை அவதானித்து இந்தத் தொப்பிகளையும் குண்டாந்தடிகளையும் எடுத்துச் சென்றிருக்கவேண்டுமென நம்பப்படுகிறது.

தபாற்பெட்டியுள் 6 அடி பாம்பு

லன்ஜென்பீல்ட், ஏப். 25

தபால்களைச் சேகரிப்பதற்காக தபாற்பெட்டியுள் கையைவிட்டார் ஒருதபாற்காரர். ஆனால் அவர் எதிர்பாராதபடி 6 அடி பாம்பொன்று அவர் கையில் அகப்பட்டது. பதறிய அவர் விறுவிறுவென்று பாம்பை வெளியே இழுத்தெடுத்தார்.

விஷமற்றபாம்பாக அது இருந்தபடியால் தபாற்காரர் தப்பிவிட்டார்.

விற்பனவு நிலையம் மந்திரி திறந்துவைத்தார்

கொழும்பு, வியாழன்

விவசாய விற்பனவு நிலையத்தை இன்று காலை விவசாய காணி, நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா திறந்து வைத்தார். இந்த விற்பனவு நிலையத்தில், கன்றுகள், பூக்கன்றுகள், விதைகள், ஒட்டு மரங்கள் ஆகியவை விற்பனை செய்யப்படும். இந்த விற்பனவு நிலையம் கொழும்பு, எடின்பரோ கிறெஸண்டில் நிறுவப்பட்டுள்ளது.

பயிற்சி நிறைவு தினவிருந்து

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாவட்ட கிராம சேவையாளர் பயிற்சி நிறைவு தினவிருந்து நாளை மாலை மத்திய கல்லூரி மண்டபத்தில் அரசாங்க அதிபர் திரு. வி. வி. வித்தாச்சி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

'இலங்கை பொருள்களை வாங்கவும்'

—எம். பி.

மாவனெல்லை, வியாழன்

'தேர்தலொன்றில் வெற்றி பெறுவது சுலபம். ஆனால் நாட்டின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பது சுலபமானதல்ல.' என்று குடஓயா பாலத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் மாவனெல்லை எம். பி. திரு. பி. ஆர். ரத்நாயக்கா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாடு நிதிநெருக்கடிகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டியது மக்களின் கடமையாகும் என்றும்வெளிநாட்டு சாமான்களை வாங்குவதைத் தவிர்த்து இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்க மக்கள் முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

மொழி மசோதா

புதுடில்லி, ஏப். 25

அரசாங்க மொழிகள் மசோதாவில் சில மாற்றங்களை உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி அறிவித்தார். 1975-ம் ஆண்டில் 30 பேர் கொண்ட பார்லிமெண்ட் கமிட்டிஒன்றைராஷ்டிரபதிநியமிப்பதன்மூலம் ஆங்கிலம் பற்றி பரிசீலிக்கப்படும் எனவும், இக் கமிட்டியின் சிபார்சுகள் ஹிந்தி பேசாத ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுமென்றும் திரு. சாஸ்திரி அறிவித்தார்.

இன்று மகத்தான ஆரம்பம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) நிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்)

மனோகரா (யாழ்ப்பாணம்) (ஜெமினி) (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை

26.4.63

சிவாஜி கணேசன் எஸ். எஸ். ராஜேந்திரன்

பி. சரோஜா தேவி ஆர். விஜயகுமாரி

எம். ஆர். ராதா வி. நாகையா எம். வி. ராஜம்மா

நடித்த

— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

இப்பத்திரிகை சுடரொளி பிறிண்டிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.